# உணவு இறையாண்மை மீதான வடிவங்கள்

*உணவு இறையாண்மைக்கான மக்கள் கூட்டமைப்பு*

*மற்றும்*

**பூச்சிக்கொல்லிக்கு எதிரான செயல்பாட்டு இணையம், ஆசிய பசிபிக் (PAN AP)**

**முதன்மை ஆசிரியர் :**
**ஆந்தோனியோ துஜான், ஜூனியர்,**
*ஆசிய பசிபிக் ஆய்வு இணையம் (APRN)*

**ஆசிரியர் :**
**ஜெனிபர் டெல் ரோசாரியோ மாலன்ஜோ**
*இபான் பவுன்டேசன், (IBON Foundation, Inc.)*

**திட்ட ஒருங்கிணைப்பாளர் :**
**கில்பட் எம். சேப்**
*பூச்சிக்கொல்லிக்கு எதிரான செயல்பாட்டு இணையம்*
*ஆசிய பசிபிக் (PAN - AP), உணவு இறையாண்மை மற்றும் சுற்றுச்சூழல் வேளாண்மை திட்டம்*

*வடிவமைப்பு, அட்டை வடிவம் மற்றும் வரைபடங்கள் :*
**மைக் சான்டியாகோ**

*ஆங்கிலத்தில் அச்சிட்டோர் :* **ஜூட்டா பிரின்,** *பினாங்கு*

*தமிழில் அச்சிட்டோர் :* **ஜி.கே.பி. அரக்கோணம்**

*மார்ச் 2006, முதல் வெளியீடு*

*மலேசிய நாட்டில் அச்சிட்டு வெளியிட்டோர் :*
**பூச்சிக்கொல்லிக்கு எதிரான செயல்பாட்டு இணையம்,**
**ஆசிய பசிபிக் (PAN - AP)**
**அ.பெ. 1170, 10850 பினாங்கு,**
**மலேசியா.**
**தொலைபேசி : 00 604 6570271 /6560381**
**தொலைநகல் : 00 604 6583960**
**மின்னஞ்சல் : panap@panap.net**
**URL: www.panap.net**

*உணவு இறையாண்மைக்கான மக்கள் கூட்டமைப்பை (PCFS) ஆதாரமாக குறிப்பிட்டு இந்த புத்தக வெளியீட்டை கட்டணமின்றி அனைவரும் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் இவ்வெளி யீட்டினை செறிவுப்படுத்தும் வகையில் உங்களின் மேலான ஆலோசனைகளும், கருத்துகளும் வரவேற்கப்படுகின்றன.*

*தமிழில் மொழியாக்கம் :*
**தமிழகப் பெண்கள் எழுச்சி அமைப்பு,** *சென்னை*

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முகப்புரை | 4 |
| அறிமுகம் | 7 |
| ஊக்குனர்களுக்கான குறிப்பு | 8 |
| **வடிவம் *1*** உணவு இறையாண்மை பற்றிய புரிந்துணர்தல் | 10 |
| **வடிவம் *2*** வேளாண்மை உணவு உற்பத்தி பகிர்வில் உணவு இறையாண்மை குறித்த கொள்கை வரைவு | 25 |
| **வடிவம் *3*** மக்களின் உணவு இறையாண்மை குறித்த கொள்கை ஆதரவு | 33 |
| **வடிவம் *4*** உணவு இறையாண்மைக்கான ஆதரவு குறித்த விளக்கம் | 42 |

# முகப்புரை

உலகெங்கிலும் உள்ள லட்சக்கணக்கான மக்கள் தொடர்ந்து பசிப்பிணியினாலும், வறுமையினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது உள்ள தகவல்கள்படி ஆசியாவில் மட்டும் 50 கோடி மக்கள் கடுமையான பசிக்கொடுமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் இவர்களில் அடங்கும்.

மக்களின் உணவு இறையாண்மை குறித்து விடுக்கப்பட்ட அழைப்பிற்கு உலகெங்கிலும் உள்ள வேளாண் இயக்கங்களிலிருந்து பெரும் ஆதரவு கிடைத்துள்ளது. ஏனெனில் சமூகங்களுக்கான நிலைத்த உணவு உற்பத்தியின் ஆதாரத்தை இந்த அழைப்பு அசைத்துள்ளது எனலாம். தொடர்ந்து உணவு இறையாண்மை மீது உலகமயமாக்கல் தொடுத்துள்ள ஆபத்தை நேரடியாக எதிர்கொள்ளும் அழைப்பாகவும் இது அமைந்துள்ளது.

இந்த அழைப்பிற்கு உதவும் வகையில் பூச்சிக்கொல்லிக்கு எதிரான செயல்பாட்டு இணையம், ஆசிய பசிபிக் (PAN-AP) மற்ற ஆசிய மண்டலத்தில் உள்ள சமூக இயக்கங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து உணவு இறையாண்மைக்கான திறம்பட்ட கொள்கை பரிந்துரைகளை முன் வைப்பதில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பின் முக்கிய நோக்கம் மக்கள் இயக்கங்களை வலுப்பெற செய்து அதன்மூலம் வறுமையை ஒழித்து, உணவு இறையாண்மையை அடைவதேயாகும்.

பூச்சிக்கொல்லிக்கு எதிரான செயல்பாட்டு இணையம், ஆசிய பசிபிக் (PAN-AP) வளர்த்தெடுத்துள்ள உணவு இறையாண்மைக்கான மக்கள் கூட்டமைப்பு (PCFS) இன்று உணவு இறையாண்மை குறித்த கருத்துகளை முன்வைப்பதில் முன்னணி அமைப்பாக செயல்பட்டு வருகிறது. பல ஆண்டுகளாக இக்கூட்டமைப்பு மேற்கொண்ட சீரிய ஆலோசனைகளின் வெளிப்பாடே தற்போது உருவாக்கப்பட்டுள்ள வடிவங்கள் இதற்கு முன்பாக தொடர்ந்து பல புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. கூட்டணி அங்கத்தினர்களின் ஒத்துழைப்புடன் பணியரங்கங்கள், திட்டமிடுதல் கூட்டங்கள், மாநாடுகள், ஊர்தி பயணங்கள் மற்றும் உணவு இறையாண்மை மீதான விவாதங்கள் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டன.

இவற்றில் ஒன்றாக, உணவு இறையாண்மை குறித்த பயிற்றுவிப் பவர்களுக்கான பயிற்சியினை ஆசிய பசிபிக் ஆய்வு இணையம் (APRN), பூச்சிக்கொல்லிக்கு எதிரான செயல்பாட்டு இணையம், ஆசிய பசிபிக் (PAN-AP) மற்றும் உணவு இறையாண்மைக்கான மக்கள் கூட்டமைப்பு (PCFS) ஆகியன இணைந்து ஒருங்கிணைத்தன.

இந்த பயிற்சி கூட்டம் 2004-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்தியாவின் கொல்கத்தா மாநகரில் நடத்தப்பட்டது. இந்த பயிலரங்கத்தை இந்தியாவின் சுயவேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்கான நிறுவனம் நடத்தியது. இதில் ஆசிய கண்டத்தின் பல்வேறு நாடுளில் உணவு இறையாண்மைக்காக வாதாடி வரும் பல சமூக இயக்கங்களின் தலைவர்கள், தன்னார்வ நிறுவனங்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

பயிற்சிகளை நடத்துவதற்கேற்ப வடிவங்களுக்கான நகல்களை பயிற்சியாளர்கள் தயாரித்தனர். இந்த வடிவங்கள் மூன்று நாட்கள் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பங்கேற்பாளர்கள் முன் சமர்ப்பிக்கப்பட்டன. இந்தப் பயிற்சி கூட்டத்தில் ஆழமான கருத்துப் பரிமாற்றங்களும், உயிரோட்டமான விவாதங்களும் நடத்தப்பட்டு அவை தொகுக்கப்பட்டு தற்பொழுது உருவாக்கப்பட்டுள்ள வடிவங்களுக்கான முதன்மை தகவல்களாக பயன்படுத்தப்பட்டன.

இந்த வடிவங்களை தயாரிப்பதற்கு பயிற்சிக் கூட்டத்தின் அர்த்தமுள்ள பல விவாதங்கள் தூண்டுகோல்களாக அமைந்தன. இந்த பயிற்சிகளை நடத்தி வடிவங்களுக்கான நகல்களை தயாரித்த குழுவில் ஆன்டோனியோ துஜான் (APRN), கில்பர்ட் சேப் (PAN-AP) மர்லோ அபாஜா (APRN) ஆகியோர் இருந்தனர். நிகழ்வுகளை தொகுத்தவர் கேத்ரின் மங்கா (IBON). தொடர்ந்து உணவு இறையாண்மைக்கான மக்கள் கூட்டமைப்பு, இபான் நிறுவனத்தின் மூலம் வடிவங்களை மேம்படுத்தி புத்தகமாக வெளியிட உழைத்துள்ளது.

உணவு இறையாண்மைக் குறித்த கருத்தாக்கங்களை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்த இந்த வடிவங்களை ஊக்குனர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இதன்மூலம் மக்களை ஒருங்கிணைத்து உணவு இறையாண்மை குறித்த விவாதங்களையும், ஆய்வுகளையும் வலுப்பெறச் செய்யக்கூடும்.

உணவு இறையாண்மைக்கான மக்கள் கூட்டமைப்பு தொடர்ந்து பயிலரங்குகளை நடத்தி இந்த வடிவங்களை மேம்படுத்தவும் அதன்மூலம் பல ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொள்ளவும் துணைபுரியும்.

**சரோஜினி ரெங்கம்**

செயல் தலைவர்

பூச்சிக்கொல்லிக்கு எதிரான செயல்பாட்டு இணையம்

ஆசிய பசிபிக் (PAN-AP)



# அறிமுகம்

உணவு இறையாண்மை குறித்த கருத்தியல்கள் உலகமயமாக்கல் பற்றியதான கருத்தியல்களுக்கு ஒத்தவை. அதாவது இவை பல்வகை மனிதர்களுக்கு பன்முக அர்த்தங்களை கொடுப்பவையாக உள்ளன. அதேநேரத்தில் பல்வேறு சூழ்நிலைகளில் பயன்படுத்தப்பட்டு வேறுபட்ட கண்ணோட்டங்களையும் கொண்டுள்ளன.

உணவு இறை யாண்மை பற்றிய ஆர்வம் கொண்டுள்ள மாணவர்கள் மற்றும் வழக்கு ரைஞர்களை பொறுத்தவரை இந்த கருத்தியல் மீதான பன்முக ஆதரவாளர்களை கவனத்தில் கொள்வதே முக்கியமாகும். அதை தவிர்த்து இந்த கருத்தியல் குறித்து குழப்பம் ஏற்படுத்திக்கொள்ளத் தேவையில்லை.

தற்பொழுது நிலவி வரும் சிறிய உணவு உற்பத்தி யாளர்களின் குடிபெயர்தல், தொடர்ந்து நிலவி வரும் வறுமை மற்றும் பசிப்பிணி, உற்பத்தி சாதனங்கள் மற்றும் நிலத்தின் மீது பொது மக்கள் இழந்து வரும் கட்டுப்பாடு ஆகியனவற்றை கருத்தில் கொண்டு உணவு இறையாண்மை குறித்த கொள்கைகளை பிரபலப்படுத்துவதை உறுதி செய்வதே நமது முயற்சியாக இருக்க வேண்டும்.

உணவு இறையாண்மை குறித்த கருத்துகளை பிரபலப்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள் உறுதி செய்யப்படுவதை ஏற்றுக் கொள்வதன் மூலம் அதன் பலன்களை அறுவடை செய்ய வேண்டும்.

இந்த முயற்சிகள் உலகமயமாக்கலுக்கு எதிரான கொள்கை ரீதியான பதிலியாக உணவு இறையாண்மை மேம்பாட்டு பணிகள் அமைவதற்கு இசைவானதாக இருக்கும்.

உணவு இறையாண்மைக்கு சாதகமான கருத்தியல்களை முன்வைத்து செயல்பட்டு வரும் ஆதரவாளர்களின் கரங்கள் வலுப்படுத்தப் பட வேண்டும்.

உணவு மற்றும் வேளாண்மை குறித்த கொள்கை வரைவுகள், அதன் மீதான பொது மக்களின் ஒத்துழைப்பை ஊக்கப் படுத்துதல் அதிகப்படுத்துதல் ஆகியனவற்றுக்கு ஏற்ப உணவு இறையாண்மை குறித்த கருத்தியல்கள் தெளிவு பெறவும், உணவு இறையாண்மை மூலம் எதனை அடையலாம் என்பது குறித்து ஆழமான புரிந்து ணர்வுகளை கொணரவும், இறையாண்மை எதற்கு? அதனை எவ்வாறு எட்டலாம்? ஆகியன குறித்தும் கருத்தியல்கள் தெளிவுப்படுத்த வேண்டும்.

## ஊக்குனர்களுக்கான குறிப்பு

இந்த பயிற்சி இரண்டு நாட்களில் நடத்தப்பட வேண்டும். சர்வதேச அளவிலான பங்கேற்பாளர்களின் தேவைகளை சந்திக்கும் வகையில் விவாதங்களில் தேசிய மற்றும் உள்ளூர் பிரச்சனைகள் எடுத்துக் கொள்ளப் படவேண்டும்.

உணவு மற்றும் வேளாண்மைப் பணிகள் சம்பந்தப்பட்ட பணியாளர் கள் மற்றும் உணவு இறையாண்மை கொள்கை களை பிரபலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்கள் ஆகியோர் இந்த பயிற்சியில் பங்கேற்க இலக்கு நிர்ணயிக்கப்பட வேண்டும். பங்கேற்பாளர்கள் அனுபவசாலிகளாகவும், படித்தவர்களாகவும் இருப்பது அவசியம்.

அதன்மூலம் உணவு இறையாண்மை குறித்த பிரச்சனைகளை முழுமையாக புரிந்துக்கொள்ளவும், ஆலோசனைகளில் திறன்பட பங்களிக்கவும் அவர்களால் முடியும்.

## வடிவங்களை பயன்படுத்துதல்

முக்கியமான கருத்தாக்கங்கள் மற்றும் பிரச்சனைகள், கொள்கை நடைமுறைப்படுத்துதல் குறித்த காரணிகளை வெளிப்படுத்துதல், மற்றும் உணவு இறையாண்மைக்கான முகாம்களை வடிவமைத்தல் ஆகியன தொடர்பானவற்றை விளக்கும் வகையில் இந்த வடிவங்கள் அமையப் பெற்றுள்ளன.

இப்பணிகளில் ஈடுபட்டுள்ள ஊக்குனர்களுக்கான கருவிகளாக இந்த வடிவங்கள் இருக்கும். அவர்கள் உணவு மற்றும் வேளாண்மை பிரச்சனை களை புரிந்தவர்களாக, அதன்மீது அனுபவம் பெற்றவர்களாக இருக்கின் றார்கள். மனித உரிமைகள், உலகமயமாக்கல் அதன் செயல் அமைப்புகள் (சர்வதேச நிதி நிறுவனம், உலக வர்த்தக நிறுவனம் ஆகியன) மற்றும் உணவு இறையாண்மை குறித்து புரிந்துக் கொள்ள இந்த வடிவங்கள் பயன்படும்.

உணவு இறையாண்மை குறித்த பயிற்சிகளை வடிவமைத்து நடத்துவதற்கு ஏதுவாக இந்த வடிவங்கள் உள்ளன. குறிப்பாக உள்ளூர் மற்றும் தேசிய பிரச்சனைகளை ஆய்ந்தறிந்து அதனடிப்படையில் பயிற்சிகளை நடத்த இவ்வடிவங்கள் உறுதுணையாக இருக்கும்.

# பயிற்சி

# உட்கூறுகள்

# Course Component



## வடிவம் 1

# உணவு இறையாண்மை பற்றிய புரிந்துணர்தல்

**நோக்கங்கள் :**


1. உணவு இறையாண்மை குறித்த விளக்கங்கள் அது தொடர்பான கருத்தியல்கள்
2. தற்போதைய சூழ்நிலைகளில் உணவு மற்றும் வேளாண்மை குறித்த பிரச்சனைகளை பற்றிய ஒட்டுமொத்த கண்ணோட்டத்தை வழங்குதல்
3. உலகமயமாக்கல் சூழ்நிலைகளில் உணவு இறையாண்மையின் அவசியத்தை முன்வைத்தல்.

**காலம்** 3 மணிநேரம்

## I. உணவு இறையாண்மை என்றால் என்ன?

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் குழுவினிடம் உணவுக்கான உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி கடந்த 2004-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்தார். அதன்படி உணவு இறையாண்மை என்பது மக்கள், சமூகம் மற்றும் நாடுகள் தங்களின் சொந்த உற்பத்தி முறைகள் மீது கொண்டுள்ள உரிமைகளை உறுதி செய்வதாகும் என்றார். மேலும் இவை தொடர்பான வேளாண் தொழில், மீன் பிடித்தொழில், உணவு, நிலம் அதுசார்ந்த கொள்கைகள் போன்றவை சுற்றுச்சூழல், சமூகம், பொருளாதாரம், கலாச்சாரம் ஆகிய காரணிகளுக்கு ஏற்புடையதாகவும் மக்களின் தனித்தன்மை வாய்ந்த சூழ்நிலைகளுக்கு இசைவானதாகவும் பொருந்தக் கூடியதே உணவு இறையாண்மை என்றும் இயம்பி உள்ளார்.

சர்வதேச வேளாண் தொழிலாளர்கள் நிறுவனமான லா வியா கேம்பசினா, குறிப்பிடுகையில் உணவு இறையாண்மை என்பது மக்கள், அவர்களின் நாடுகள் அல்லது பல மாநில கூட்டமைப்புகளின் உரிமைகள் என்றும் அந்நிய நாடுகளில் இருந்து உணவுப் பொருட்களை குவிப்பதை தவிர்த்து வேளாண்மை மற்றும் உணவு கொள்கைகள் மீது அவர்கள் கொண்டுள்ள உரிமைகள் என்றும் விளக்குகிறது.



உணவு இறையாண்மை, உணவுப் பாதுகாப்பு என்றதொரு பொதுவான கருத்தியலை விட ஆழமான அர்த்தங்களை கொண்டதாகும். உணவுப் பாதுகாப்பு ஒரு சமூகத்தில் போதுமான உணவு உற்பத்தி யாகின்றன. என்பதை உறுதி செய்யும் கோட்பாடாகும். ஆனால் இக்கோட்பாடு எப்படிப்பட்ட உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப் படுகின்றன, அவை எவ்வாறு? எங்கு? எந்த அளவு உற்பத்தியாகின்றன என்பதினை குறித்து விளக்குவதில்லை. ஆனால் உணவு இறையாண்மை இந்த கோட்பாடுகளையும் விஞ்சி மக்களின் உரிமைகள் குறித்து இயம்புகிறது. மேலும் உணவு மீதான உரிமைகள் குறித்து பரந்துப்பட்ட விளக்கங்களை எடுத்துரைக்கிறது.

உணவு இறையாண்மை என்பது மக்கள் அவர் தம் சமூகங்கள் கொண்டுள்ள சுதந்திரத்தையும், மக்களின் சக்தி தொடர்புடையதும், அவற்றின்மூலம் உணவு மற்றும் உணவு உற்பத்தி மீது மக்களின் உரிமைகள், உணர்வுகளை நிலைநிறுத்தக் கூடிய கோட்பாடாகும். மக்களின் உணவு உற்பத்தி முறைகளை வர்த்தகம், முதலீடு, கொள்கைகள், செயல்பாடுகள் என்ற போர்வையில் அழிக்க முற்பட்டு வரும் பன்னாட்டு முகமைகள் அவைகளின் ஆதிக்க சக்திகளை எதிர்த்துப் போராட வலியுறுத்துவதுமாகும்.


உணவு இறையாண்மை என்பது உணவுப் பொருட்கள் மீது மக்களின் உரிமையை உறுதி செய்யும் செயல்பாடாகும். உலக உணவு மற்றும் வேளாண் நிறுவனத்தின் கருத்துப்படி, மக்கள் நிரந்தரமான சரியான இடைவெளியில் சுதந்திரமாக உணவுப் பொருட்களை, நேரடியாகவோ அல்லது நிதி ஆதாரங்கள் மூலமாக நுகரக்கூடியதும், போதுமான அளவு மற்றும் தரத்தில் கிடைக்கச் செய்வதும் மக்களின் கலாச்சார, பாரம்பரிய சூழ்நிலைகளுக்கு பொருந்தக்கூடியதும், மக்களின் உடலியல் மற்றும் மனயியல் இயல்புகளுக்கு ஏற்றதும், தனி நபர் அல்லது ஒரு குழுவின் தேவைகளை சந்திக்கக் கூடியதும், அவர்களின் தகுதிவாய்ந்த ஒரு சுதந்திரமான, பயமற்ற வாழ்க்கை முறையை தரக்கூடியதும் என்று எடுத்துரைத்துள்ளது.

பசிப்பிணி என்பது உணவுக்கான உரிமையை மீறும் செயல்பாட்டின் வெளிப்பாடாகும். இன்று பல நாடுகளில் இச்சூழ்நிலை நிலவுகிறது. தொடர்ந்து அதிகரித்தும் வருகிறது. உலகிலேயே இந்தியாவில் தான் அதிக எண்ணிக்கையில் மக்கள் போதுமான ஊட்டச்சத்து கிடைக்காமல் அவதிப்பட்டு வருகின்றனர். இந்தியாவிற்கு அடுத்த நிலையில் சீனா இருந்து வருகிறது. உலக மக்கள் தொகையில் ஆசிய பசிபிக் மண்டலத்தில் மட்டும் 60 சதவீதம் பேர் போதுமான ஊட்டச்சத்து கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து சஉறாரா மண்டல ஆப்பிரிக்கா நாடுகளில் 24 சதவீதம் பேரும், லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளில் 6 சதவீதம் பேரும் போதுமான ஊட்டச்சத்து

கிடைக்காமல் அவதியுற்று வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 54 லட்சம் பேர் போதுமான உணவு கிடைக்காமல் பசிப்பிணியால் பாதிக்கப்பட்டுள்ளனர். பசிக்கொடுமைகள் மற்றும் ஊட்டச்சத்து குறைப்பாடுகளால் ஆண்டொன்றுக்கு 3.6 கோடி பேர் உயிரிழப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பசிப்பிணி, உணவு கிடைத்தல் போன்றவற்றில் உள்ள பிரச்சனைகளை எதிர்கொள்ளும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் நிறுவனம் "உணவுப் பாதுகாப்பு" என்ற கோட்பாட்டை உருவாக்கியது. அதன்மூலம் எல்லா நேரங்களிலும், எல்லா மக்களுக்கும் உணவுப் பொருட்கள் கிடைக்க வேண்டும். அளவு, தரம் மற்றும் வகைகளில் போதுமான சத்துணவு மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்றும், அந்தந்த மண்டல மக்களின் கலாச்சாரத்திற்கு அவை பொருந்தக்கூடியதாக இருக்க வேண்டும் என்றும் உணவு பாதுகாப்பு கோட்பாட்டை இந்த அமைப்பு விளக்கி உள்ளது.

## சத்துணவு கிடைக்காத மக்களின் எண்ணிக்கை 1999 - 2000 (மில்–யன்கள்)




* தைவான் பிராந்தியத்தை உள்ளடக்கிய சீனா

** சீனா - இந்தியா தவிர்த்து

ஆதாரம் : உலகில் உணவுப்பாதுகாப்பின்மையின் நிலை - 2003
ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம்

மேலே குறிப்பிட்டுள்ள விளக்கம் ஒரு நாட்டினுடைய உற்பத்தி திறன் மற்றும் மக்களின் அடிப்படை உணவுத் தேவைகளை சந்திக்கும் வகையில் சமத்துவ முறையில் பகிர்ந்தளிக்கும் திறனை கருத்தில் கொள்ளாமல் தரப்பட்டுள்ளது. அதேநேரத்தில் ஏழை நாடுகளில் கட்டுக்கு அடங்காத முறையில் தரம் தாழ்ந்த உணவுப் பொருட்களை, அதிக அளவில் மானிய உதவியுடன் உற்பத்தி செய்யப்பட்ட வேளாண் பொருட்களை எவ்வாறு, ஏற்றுமதி என்ற பெயரில் வளர்ந்த நாடுகள் கொண்டுக் குவிக்கின்றன என்பதனையும் விளக்க தவறியுள்ளது. சுதந்திர மான வர்த்தக முறைகளை ஊக்குவிக்கின்றோம் என்ற பெயரில் வளர்ந்த நாடுகள் இப்படிப்பட்ட செயல்களை அனுமதிப்பதுடன் தொடர்ந்து அதனை ஊக்குவிக்கவும் செய்கின்றன.

இப்படி இருப்பதாலேயே உணவுப் பாதுகாப்பு என்ற கோட்பாட் டை அனைத்து அரசுகளும், அரசாங்க முகமைகளும் ஏற்றுக் கொண் டுள்ளன. இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. உணவுப் பாதுகாப்பு கோட்பாட்டை அடைவது குறித்த வழிமுறைகள், பொறுப் புணர்வுகள் என்று மறு விளக்கம் தரப்பட்டு அரசாங்கங்களின் கையிலிருந்து பறிக்கப் பட்டு இவை இன்று சந்தை கட்டுப்பாட்டுச் சூழல்களுக்கு தள்ளப் பட்டுள்ளது.

புதிய பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டங்கள் மூலம் உணவுப் பாதுகாப்பு கோட்பாட்டை அடைய முடியும் என்ற நம்பிக்கை யுடன் பன்னாட்டு நிதியம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக நிறுவனம் போன்ற சர்வதேச அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இப்படிப் பட்ட மறு கருத்தியலாக்க கோட்பாடுகள் உணவுப் பாதுகாப்பு என்பது உலகில் அதிகாரம் படைத்த நாடுகள், கழகங்களுக்கு தோதாக வடிவமைக் கப்பட்டு, உணவு மற்றும் வேளாண்சார்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டில் அந்நாடுகள் கழகங்களின் செயல்பாடுகளை ஊக்குவிப்பதாகவும் உள்ளன.

உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு மாறாக மலிவான உணவுப் பொருட்களை ஏழை நாடுகள் இறக்குமதி செய்வதன் மூலம் உணவுப் பாதுகாப்பை அந்நாடுகள் அடைய முடியும் என்று புதிய பொருளாதார கொள்கையும், அது தொடர்புடைய வர்த்தகக் கொள்கை களும் வலி யுறுத்தி வருகின்றன. சுதந்திர வர்த்தகம் என்பது உணவு பாதுகாப்புக்கு அடிப்படையானது என்றும் அதன்மூலம் உலகில் உள்ள வளங்கள் திறமையாக பயன்படுத்தப்படும் என்றும், உலக வங்கி கூறி யுள்ளது.

## உணவு இறையாண்மை குறித்த கருத்தியல் மேம்பாடு

உணவு இறையாண்மை குறித்த கருத்தியல் பற்றிய சர்வதேச அளவிலான பொது விவாதம் கடந்த 1996-ல் நிகழ்ந்த உலக உணவு மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன்மூலம் புதிய பொருளாதார கொள்கைகளுக்கு மாற்று முறைகளை ஏற்படுத்த முடியும் என்று நம்பப்பட்டது. மக்களின் உணவுக்கான உரிமை கோட்பாட்டை அடிப்படையாக கொண்டு மாற்று முறையை முன்வைக்கும் வகையில் இக்கோட்பாடு வளர்த்தெடுக்கப் பட்டது. பசிக்கொடுமையை ஒழிப்பதில் தோல்வியுற்ற உணவுப் பாதுகாப்பு கோட்பாட்டுக்கு எதிரான மக்களால் முன்மொழியப்பட்ட புதிய கோட்பாடே உணவு இறையாண்மையாகும்.

1996-ஆம் ஆண்டு நடந்தேறிய உலக உணவு மாநாட்டில் பங்கேற்ற அரசாங்க பிரதிநிதிகள் உலகில் பசிக் கொடுமையில் சிக்கித் தவிக்கும் மக்களின் எண்ணிக்கையை எதிர்வரும் 2015-ஆம் ஆண்டுக்குள் பாதியாக குறைக்க வேண்டுமென்று உறுதிமொழி எடுத்துகொண்டனர். ஆனால் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் நோக்குகையில் பசிக் கொடுமையால் தவிக்கும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருவதைவிட தொடர்ந்து அதிகரித்து வருகின்றன என்பதே.

தேவையான ஊட்டச்சத்து கிடைக்காமல் பாதிக்கப்பட்டு வரும் மக்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையை கட்டுப்படுத்த வேண்டுமென்று பல்வேறு அரசாங்கங்களும், ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்களும் அதாவது உலக உணவு மற்றும் வேளாண் நிறுவனம் போன்ற அமைப்புகள் குரல் கொடுத்தும் சூழ்நிலைகள் மாறியபாடில்லை.

தற்பொழுது உருவாகியுள்ள புதிய பொருளாதார கொள்கையின் அடிப்படையிலான உலகமயமாக்கல் சூழ்நிலைகளில் மொத்தம் உள்ள 149 ஏழை நாடுகளில் 105 நாடுகள் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்துவருகின்றன. அதாவது இந்த நாடுகள் சுயமாக உணவு பொருட்களை உற்பத்தி செய்யும் தகுதியினை பெறத் தவறியுள்ளன.

புதிய பொருளாதார கொள்கைகள் மக்களின் உணவுக்கான உரிமைகள் மீது சர்வதேச வர்த்தக முறைகளை திணிப்பதின் மூலம் உணவு இறையாண்மை கோட்பாட்டை மழுங்கடித்துள்ளன. விவசாய தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புற இயக்கங்கள் இந்த புதிய கொள்கைகள் மூலம் உலகிலுள்ள பசிக்கொடுமை ஒழிக்கப்பட மாட்டாது என்பதனை உறுதி செய்துள்ளன.

இந்த புதிய கொள்கைகள் வேளாண் இறக்குமதிகள் மீதும், வேளாண் துறையை தொழில்மயமாக்குதலை ஊக்குவிக்கும் செயல்பாடுகள் மீதும் மக்களின் சார்புத் தன்மையை அதிகரித்துள்ளன. இதன்மூலம் பூமி வளத்தின் மரபியல், கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாரம்பரிய முறைகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது மட்டுமல்லாமல் உலக மக்களின் சுகாதாரத்தையும் பெரிதளவு பாதித்துள்ளன.

அறிமுகத்திற்கு பின் உணவு இறையாண்மை கருத்துகள் இன்று சர்வதேச அளவிலான வேளாண்மை குறித்த நிகழ்ச்சிகளில் முக்கிய விவாதப் பொருளாக எடுத்துக்கொள்ளப்பட்டு உள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் நிகழ்ச்சிகளிலும் இவை முக்கிய அங்கம் வகிக்கின்றன. 2002-ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடந்த உலக உணவு மாநாட்டிற்கு மாற்றாக தன்னார்வ குழுக்களால் நடத்தப்பட்ட மாநாட்டின் மூலக் கருப் பொருளாக உணவு இறையாண்மை கருத்தியல்கள் இருந்தன.

## உணவு இறையாண்மையின் அளவும், சூழ்நிலையும்

உணவு மற்றும் வேளாண் கொள்கைகளை உறுதி செய்வது மீதான உரிமையே உணவு இறையாண்மை என்ற விளக்கம் இருந்தபோதும் இதனை புரிந்து கொள்வது குறித்து இன்றும் பல குழப்பங்கள் நிலவி வருகின்றன. ஏனெனில் இந்த கோட்பாட்டின் கருத்தியல் புரிதல் பல்வேறு மட்டத்தில் பல்வேறு சூழ்நிலைகளில் மாறுபட்ட கண்ணோட்டத்தில் விவாதத்திற்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## உணவு இறையாண்மை பல்வேறு அளவுகளையும், சூழ்நிலைகளையும் உள்ளடக்கியது

1. மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கையாக,

2. மக்களின் சனநாயக உரிமைகளை வளர்த்தெடுக்கும் கொள்கையாக,

3. ஏகாதிபத்தியம் மற்றும் பிற நாடுகளின் உரிமைகளில் தலையிடுதலுக்கு எதிரான சர்வதேச உறவுகள் சம்பந்தப்பட்ட கொள்கையாக,

4. உணவு, வேளாண்மை கொள்கைகள் தொடர்புடைய விவாதங்கள், வடிவாக்கங்கள் பற்றிய அடித்தளம் அமைத்தல் மற்றும் வரையறைக்கும் கொள்கையாக,

5. ஒற்றுமை மற்றும் கூட்டமைப்பு சம்மந்தப்பட்ட வரையறையாக,

6. குறிப்பிட்ட கொள்கை நோக்கத்திற்காக,

7. சமூக திட்டங்களுக்கான ஒரு தொகுப்பாக,

உணவு வாழ்க்கையின் ஆதாரம். எனவே உணவுக்கான உரிமை என்பது மனித வாழ்க்கையின் அடிப்படை மனித உரிமைகளின் விரிவாக்கமாகும். மனித உரிமைகள் சம்மந்தப்பட்ட கொள்கைகளில் உணவு இறையாண்மை தனி நபர் மற்றும் கூட்டு உரிமைகளை நிலை நிறுத்துவதுடன், அவ்வுரிமைகளை மேம்படுத்தவும், உணரச் செய்யும் தளமாகவும் அமைந்துள்ளது. தனி மனித உறுதிப்பாட்டிற்காகவும், மக்கள் தங்களின் உரிமைகளை நிலை நிறுத்துவதில் தன்னிச்சையாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆதாரமாகவும் உணவு இறை யாண்மை கொள்கை திகழ்கிறது.

மக்களின் தனிநபர் மற்றும் கூட்டு உரிமைகளை நிலைப்படுத்தும் செயல்பாடு இறையாண்மையாகும். எனவே உணவு இறையாண்மை என்பது மனித உரிமைகள் குறித்த விளக்கங்களையும் மீறி செயல் படுகிறது. மனித உரிமைகள் என்பது இன்றைய சூழலில் மேல் தட்டு மக்களின் பேச்சுப்போக்கில் கையாளப்படும் வார்த்தை ஜாலமாக மாறி யுள்ளது. எனவேதான் இறையாண்மை என்ற கருத்து இன்று உணவு இறையாண்மை கோட்பாட்டின் மூலம் மக்கள் வலுப்பெற முடியும் என்பதனை எடுத்துரைக்கிறது.

அனைத்து செயல்பாடுகளும் மக்கள் மத்தியில் இருந்தே புறப்படுகின்றன என்ற அடிப்படை கோட்பாட்டை வலியுறுத்தும் உண்மையான சனநாயக கொள்கைகளில் உணவு இறையாண்மை முக்கிய அங்கம் வகிக்கிறது. இக்கோட்பாடு மக்கள் தங்களின் இறை யாண்மையை, வலிமையை அடைவதற்கான சிறந்த அடித்தளமாக அமைந்துள்ளது. பொது மக்களின் நெடுநாளைய வேண்டுகோளான நியாயமான சனநாயக செயல்பாடுகள் உணவுக்கான உரிமையை கேட்டுப் பெறுவதன் மூலம் மேம்படுத்தப்படுகிறது.

மக்களின் உரிமைகள் மற்றும் சந்தை சக்திகளுக்கிடையேயான முரண்பாடுகளை உணவு இறையாண்மை கோட்பாடுகள் முன் வைக்கின்றன. புதிய பொருளாதார கொள்கைகளை எதிர்ப்பதுடன் ஏகாதி பத்திய செயல்பாடுகளுக்கு எதிராக ஒரு நல்ல தேசியவாத அமைப்பாக உணவு இறையாண்மை கோட்பாடு துளிர்த்துள்ளது. உலக வர்த்தக நிறுவனம், உலக வங்கி, பன்னாட்டு நிதியம் போன்ற ஏகாதிபத்திய சக்திகளின் சிந்தனைகளை எதிர்த்து மக்கள் செயல்பட உணவு இறை யாண்மை கோட்பாடு அழைப்பு விடுத்துள்ளது. இவ்வமைப்புகள் அனைத்தும் வலிமை வாய்ந்த நாடுகளின் கட்டளைகளை ஏற்று அவற்றின் சர்வதேச நிறுவனங்களின் முகமைகளாக செயல்பட்டு வருகின்றன.

உணவு இறையாண்மைக்கான போராட்டங்களின் நோக்கம், மக்களின் உணவு மற்றும் வேளாண்மை சார்பான கொள்கைகளை பரப்புவதில் முக்கிய அங்கம் வகிக்கிறது. இது உரிமைகள் அடிப்படை யிலானது. மக்கள் சக்தியை முன்னோக்கி எடுத்துச் செல்வது. மக்கள் ஏற்புக் கொள்கைகளை தெளிவுப்படுத்துவது, அடிப்படை மக்களின் உரிமைகளை முன்வைத்து நேரடி போராட்டங்களை நடத்துவது. உணவு இறையாண்மை சுதந்திரமான வர்த்தக கொள்கைகளை எதிர்க்கிறது. இக்கொள்கைகள் தான் பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் உணவு மற்றும் வேளாண் துறைகள் மீது கட்டுப்பாடுகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கிறது. உலக வர்த்தக அமைப்பு போன்ற நிறுவனங்கள் உணவு மற்றும் வேளாண்மை தொடர்புடைய நிகழ்வுகளிலிருந்து முழுவதுமாக

அந்நியப்பட வேண்டும் என்று உணவு இறையாண்மை வலியுறுத்து கிறது. மேலும் உள்ளூர் வேளாண் துறையின் (குறிப்பாக வேளாண் சீர்திருத்தம் குடிநீர் மற்றும் பாசன நீர் தேவைகளை பெறுதல், விதைகள், கடனுதவிகள் பெறுதல் சம்மந்தப்பட்டவைகளில்) கொள்கைகளை வலுப்படுத்துவது, விவசாயிகளையும், நுகர்வோரையும் பாதுகாப்பது (அதிகபட்சமாக மலிவான உணவுப் பொருட்கள் மற்றும் மரபணு மாற்று விதைகளை ஏழை நாடுகளில் அறிமுகப்படுத்துதல் எதிராக) போன்ற வற்றில் உணவு இறையாண்மை கொள்கைகள் முக்கிய கருத்துகளை முன்வைக்கின்றன.

சமூகத்தின் பல்வேறு துறைகளில் உள்ள மக்களை ஒருங்கிணைத்து ஒற்றுமைப்படுத்தும் வடிவமாக உணவு இறையாண்மை கொள்கைகள் உள்ளன. உணவு இறையாண்மை கோட்பாட்டை மேம்படுத்துல் என்பது நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் முன்னுள்ள முக்கிய செயல் பாடாகும். அடிப்படையில் உணவு இறையாண்மை என்பது விவசாயி கள், வேளாண் தொழிலாளர்கள், மீனவர்கள், தொழிலாளர்கள், உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நகர்புற ஏழைகள் மற்றும் அடித்தள மக்க ளுக்கு முன்னுள்ள முக்கிய கருவியாக உருவெடுத்துள்ளது. பெண்கள், பூர்வகுடிகள், உணவு வேளாண் துறையில் தொடர்புடைய அறிவியலாளர் கள் மற்றும் நுகர்வோர் இயக்கங்கள் போன்றவர்களுக்கு உணவு இறை யாண்மை செயல்பாடுகள் முக்கிய கருத்தியலாக இன்று உருவாகியுள்ளது.

உணவு மற்றும் வேளாண்மை சம்மந்தப்பட்ட துறைகளில் தற்பொழுது எழுந்துள்ள பிரச்சனை களை எதிர்கொள்ளும் வகையில் உணவு இறையாண்மையின் குறிப் பிட்ட சில கொள்கை நோக்கங்கள் அமைந்துள்ளன. அதாவது இந்தக் கொள்கைகள், சட்டங்கள், முறை மைகள் மற்றும் வடி வமைப்புகள் ஆகியன உணவு, உணவு உற்பத்தி வளங்கள் மீது மக்கள் தங்கள் கட்டுப் பாட்டை பெறும் வகையில் அமைந் துள்ளன. இதன்மூலம் உற்பத்தித் துறைகள், மற்ற அடிப்படையான ஒடுக்கப்பட்ட துறைகள் குறித்து பெரு மளவு சிந்திக்கவும் அவற்றின் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தவும் உணவு இறையாண்மை உதவுகிறது.



பல்வேறு துறைகளின் தேவைகளை முன்வைத்து அதாவது சமூக, பொருளாதார திட்டங்கள் மூலம் அந்தந்த சூழ்நிலைகளுக்கு பொருந்தும் வடிவங்களையும், திட்டங்களையும் உணவு இறையாண்மை வலியுறுத்து கிறது. பூர்வகுடிகள், பெண்கள், குழந்தைகள் ஆகியவர்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தவும் அவர்கள் சிறப்புப்பெற்ற துறைகளாகவும் இக்கோட் பாட்டால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். பன்நெடுங்காலமாக பாகுபாட்டு டன் நடத்தப்பட்டு தற்போதுள்ள ஆணாதிக்க மற்றும் பண்ணை முதலாளித்துவ அமைப்புகளால் சுரண்டப்பட்டவர்கள் இவர்கள் என்பது வெளிப்படை.

## II.உணவு இறையாண்மைத் தேவைகளின் அவசியம் என்ன?

## உணவு உற்பத்தி மற்றம் வேளாண் துறைகளில் சீரழிவு :

தாராளமயமாக்கப்பட்ட புதிய பொருளாதார கொள்கைகளையும் பெருகி வரும் சுதந்திர வர்த்தகத்தையும் மூலதனமாகக் கொண்டு செயல்பட்டு வரும் பெரிய அளவிலான பன்னாட்டு அமைப்புகள் இன்று உலக வேளாண்மையையும், உணவு முறைகளையும் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டில் வைத்துள்ளன. இச்சூழலில் ஏழை மக்களையும், வறுமையையும் தங்களுக்கே சொந்தமாக்கிக் கொண்டுள்ள ஏழை நாடுகள் வேளாண் ஏற்றுமதி தொடர்பான கட்டுப்பாடுகளுக்குள் சிக்கித் தவிக்கின்றன.

சிறிய அளவில் மற்றும் உள்ளூர் சூழ்நிலைகளைச் சார்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய வேலைகள், போதுமானதல்ல என்று இன்றைய தாராளமயமாக்கல் கொள்கைகளால் முத்திரையிடப்பட்டு, ஒதுக்கப்பட்டு வருகின்றன. உணவுப் பொருட்கள் உற்பத்திக்காக பயன் படுத்தப்பட்டு வந்த பெருவாரியான நிலங்கள் இன்று பணப்பயிர்களின் உற்பத்திக்கேந்திரமாக மாற்றப்பட்டுள்ளன.

இதன்மூலம் லட்சக்கணக்கான ஏழை மக்களின் வாழ்க்கை முறை சீரழிக்கப்பட்டு வறுமையும், பசிப்பிணியும் பெருகி உள்ளன. தோட்டப்பயிர்கள் மூலம் பெறப்படும் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு பெருவாரியான அந்நிய செலாவணி ஈட்டப்படுகிறது. இதன்மூலம் உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

உதாரணமாக இலங்கையில் தாராளமயமாக்கல் கொள்கை வேளாண் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டதற்கு பின் உணவு இறக்குமதியின் அளவு 1985-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1998-ஆம் ஆண்டில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. நாட்டின் பெருவாரியான உணவு உற்பத்திப் பொருட்களின் அளவு குறைந்துள்ளது. அதேநேரத்தில் எதிர்பார்த்த அளவிற்கு ஏற்றுமதி அதிகரிக்கவில்லை. இதனால் கிராமப்புறங்களில் பெருவாரியான வேலைவாய்ப்பு இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதேநேரத்தில் வேளாண் இரசாயன தொழிலில் ஈடுபட்டுள்ள பெருவாரியான பன்னாட்டு நிறுவனங்கள் இரசாயன செறிவுடன் கூடிய அதிகளவிலான மரபணு மாற்று சாகுபடியினை மேற்கொண்டுள்ளன. இதன்மூலம் விவசாயிகள் தொடர்ந்து ஒரேவிதமான உற்பத்தி முறையின் மீது சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது பன்னாட்டு நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சாகுபடி முறைகள் நிலத்தின் தன்மையை பெருமளவு பாதித்துள்ளன. பாரம்பரிய சாகுபடி முறை பற்றிய அறிவையும் நீடித்த நிலைத்த சுற்றுச்சூழலுக்கு சாதகமான சாகுபடி முறைகள் பற்றிய அறிவையும் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகின்றனர். இந்தப் போக்கு நியாயமான வேளாண் சீரமைப்பு பணிகளை தடுத்து வருகின்றது.

இன்று பின்பற்றப்பட்டு வரும் சாகுபடி முறைகளால் விவசாயிகள் தங்களுடைய வருமானத்தை இழந்து வருகின்றனர். இதற்கு காரணமாக அதிகபட்ச உற்பத்தி முதலீட்டையும் இறக்குமதி குவிப்பையும் எடுத்துரைக்கலாம். நுகர்பொருட்களின் விற்பனை விலைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இன்று சாகுபடிக்கு தேவையான இடுபொருட்களின் விலைவாசி அதிகரித்து வருவதற்கும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் குறைந்த விலையில் விற்கப்படுவதற்கும் காரணம் சந்தை சக்திகளே. இச்சக்திகள் உதாரணமாக கார்கில், மாண்சான்டோ, நெஸ்லே போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் உணவு மற்றும் வேளாண் செயல்பாடுகளை தங்களுடைய ஏகபோக கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளன.



பணப்பற்றாக்குறை சிக்கலில் தவித்து வரும் நாடுகள் கடன் தேவைகளுக்காக பன்னாட்டு நிதியம், உலக வங்கி, ஆசிய மேம்பாட்டு வங்கி போன்றவற்றை அணுகவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளன. இந்த அமைப்புகள் முன்வைக்கும் கட்டுப் பாடுகளையே உலகமயமாக்கல் கொள்கைகள் ஒவ்வொரு நாடுகளின் மீதும் திணித்து வருகிறன. உதாரணமாக பன்னாட்டு நிதியம் மற்றும் உலக வங்கியினால் 1990-களில் இறக்குமதியில் தாராளமயமாக்கம் என்ற கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்மூலம் ஐடி (Haiti) நாட்டின் அரிசி உற்பத்தி தொழிற்சாலைகள் பெருமளவு பாதிக்கப் பட்டன. இதன்மூலம் அமெரிக்க நாட்டிலிருந்து மானிய விலையில் பெருமளவு அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. இந்நாடு தற்போது ஆண்டொன்றுக்கு 3,12,006 மெட்ரிக் டன்கள் அளவு அரிசியினை இறக்குமதி செய்கிறது.

இந்நிலையில் உலக வர்த்தக நிறுவனம், மண்டல மற்றும் இருதரப்பு வர்த்தக உடன்பாடுகள் மூலம் பன்னாட்டு அமைப்புகள் ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள வேளாண் சந்தையில் தங்களுடைய ஆதிக்கத்தை செலுத்த வழிவகுத்துள்ளது. உணவு இறையாண்மை என்பது வர்த்தக நடவடிக்கைகளுக்கு எதிரானதல்ல. அதேநேரத்தில் உணவு மற்றும் வேளாண் கொள்கைகளில் சந்தை சக்திகளின் ஆதிக்கத்திற்கு முன்னுரிமை தருவதை எதிர்க்கிறது. ஏனெனில் இதன்மூலம் வேளாண் ஏற்றுமதி முன்னிலைப்படுத்தப்பட்டு உள்நாட்டு மக்களின் உணவுத் தேவைகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. எனினும் உள்ளூர் சந்தையில் குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களாலும், உள்ளூர் சந்தையை எட்டமுடியாத சூழ்நிலைகளாலும் அப்பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டு சர்வதேச சந்தையை அணுகமுடியாமல் முறையாமல் தவித்து வருகின்றனர்.

வளர்ந்த நாடுகளாகிய அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகள் கோடிக்கணக்கான டாலர்களை தொழிற் பண்ணைகளில் முதலீடு செய்து உற்பத்தி பொருட்களின் விலையை பெருமளவு குறைத்துள்ளன. தங்களது தேவைகளுக்கு அதிகமாக உபரியாக உள்ளவனவற்றை அவர்கள் சர்வதேச சந்தைகளில் கொண்டு குவிக்கின்றனர். இதன்மூலம் வடக்கு மற்றும் தெற்கில் வாழ்ந்து வரும் பல நாடுகளின் விவசாய மற்றும் விவசாய தொழிலாளர்களின் வாழ்க்கை முறை சீரழிந்துள்ளது. உதாரணமாக இங்கிலாந்து நாட்டில் உற்பத்தியாகும் கோதுமை உலக சந்தையில் டன் ஒன்றுக்கு 70 டாலராக விற்கப்படுகிறது. ஆனால் கோதுமையின் பொதுவான விற்பனை விலை டன் ஒன்றுக்கு 73 டாலர்களாகும். எனினும் ஒரு டன் கோதுமை உற்பத்திக்கான செலவு 113 டாலர்களாகும்.

உணவு இறையாண்மை என்பது சர்வதிகார போக்குடன் கூடிய வளர்ச்சி வழிமுறைகளை தன்னகத்தே கொண்டு செயல்படுத்தத் தாராள மயமாக்கப்பட்ட வர்த்தக முறையையும், முதலீட்டையும் எதிர்க்கிறது. அதேநேரத்தில் கிராமப்புற வறுமையையும், பசிப்பிணியையும் அகற்ற வேண்டுமென்று வழிகோலுகிறது. உலகமயமாக்கல் கொள்கைகளால் பெருகி வரும் வறுமைச் சூழலுக்கு பலர் இன்று பலியாகி வருகின்றனர். இதற்கு மாற்றாக கிராமப்புற வறுமை, உணவுப் பற்றாக்குறை ஆகிய வற்றை ஒழிப்பதற்கு தேவையான மாற்று திட்டம் அவசியம் என்பது உணரப்படுவதுடன், அப்படிப்பட்டதொரு திட்டம் கிராமப்புற வளர்ச்சி யையும், நிலைத்த வேளாண் வாழ்க்கை முறையையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் வலியுறுத்த வேண்டுமென்றும் அறியப்பட்டுள்ளது.

## உணவு வேளாண் முறைகளில் மக்களின் சனநாயக விருப்பங்களுக்கு முன்னுரிமை

ஏகாதிபத்திய பண்ணை அடக்குமுறை மற்றும் சுரண்டலில் இருந்து தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்று மக்கள் பன்நெடுங் காலமாக போராடி வருகின்றனர். உணவு மற்றும் வேளாண் உற்பத்தித் துறைகளில் ஈடுபட்டுள்ள விவசாயத் தொழிலாளர்கள் நிதர்சனமான வேளாண் சீர்திருத்தங்களும், நியாயமும் வேண்டி போராடி வருகின்றனர். உற்பத்தி வளங்கள் மீது பன்னாட்டு நிறுவனங்களும், உள்நாட்டு முதலாளி களும் கொண்டுள்ள கட்டுப்பாடுகளை உடைத்தெறியவும், உள்ளூர் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தேவையான பாதுகாப்பான சுற்றுச்சூழலும், வேளாண் தொழில் நுட்பத்தையும் வளர்த்தெடுக்க வேண்டுமென்று விவசாயத்தொழிலாளர்கள் போராடி வருகின்றனர்.

உணவுப் பொருட்கள் மீதான உரிமை, உணவு உற்பத்தி தங்களது உரிமை என்பதனை அங்கீகரிப்பது அதனை நடைமுறைப்படுத்துவது போன்றவற்றிற்காக மக்கள் பாடுபட்டு வருகின்றனர். அதாவது போது மான சத்துமிக்க பாதுகாப்பான, கலாச்சார ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உணவ நுகர்வு முறைகள் பல சமூகங்களுக்கு கிடைக்க வேண்டும். அச் சமூகங்கள் அனைத்துக் காலங்களிலும் போதுமான உணவுப்பொருட்களை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். அந்த உணவுப் பொருட்களின் விலைகள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும் என்று போராடி வருகின்றன. அனைத்து தரப்பு மக்களுக்கும் போதுமான வேலை வாய்ப்பும் வாழ்க்கை முறையும் அமைந்து தேவைப்படும் வருமானம் ஈட்டப்பட்டு தங்கள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துக்கொள்ளும் அளவிற்கு உணவுப் பொருட்களை வாங்கும் சக்தியினை அம்மக்கள் கொண்டிருக்க வேண்டும் என்பதும் இதில் அடங்கும்.

பொதுவாகவே மக்கள் தங்களது உணவு தேவைகளை முன்வைத்து வேளாண் உற்பத்தி முறைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். அரசின் பாதுகாப்பு, மானியம் மற்றும் பலவகையான உதவிகள் இதற்குள் உள்ளடக்கம். இந்த அணுகுமுறையுடன் பார்க்கும்போது ஏற்றுமதியை ஊக்குவித்து வரும் பணக்கார தொழில்மய நாடுகளின் போக்கு கட்டுப் படுத்தப்பட வேண்டும். உணவு மற்றும் வேளாண் துறைகளில் உலக வர்த்தக நிறுவனம் போன்ற அமைப்புகள் எந்தச் சூழ்நிலைகளிலும் மூக்கை நுழைக்காதபடி தடுக்கப்பட வேண்டும். பல விவசாய தொழிலாளர் இயக்கங்களும், பல்வேறு அமைப்புகளும் ஏற்கனவே வேளாண் சார்பு துறைகளிலிருந்து உலக வர்த்தக அமைப்பு வெளியேற வேண்டுமென்று பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

## உணவு இறையாண்மையை நடைமுறைப்படுத்துவதும், உணவுக்கான உரிமையை நிலைநிறத்துவதும் ஒரு அரசின் பொறுப்பாகும் :

மக்கள் தங்கள் உரிமையை பெற்று சுகமாக வாழ வேண்டும் என்ற சிந்தனையை பாதுகாத்து முன்னிலைப்படுத்துவது ஒவ்வொரு அரசாங்கம் மற்றும் சமூகத்தின் பொறுப்பாகும். எனவே ஒவ்வொரு அரசும் உணவுக் கான உரிமை மீதான மக்களின் விருப்பங்களை உறுதி செய்ய வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு அரசாங்கத்தின் சனநாயக ஆட்சி அதிகாரம் என்பது மக்கள் கொண்டுள்ள உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் மீது எழுப்பப்பட்டது, என்பதினை மறந்துவிடக்கூடாது. உணவு, வேளாண் செயல்பாடுகள் என்பன ஒரு நாட்டின் உணவு சுயத்தேவைகளையும் அந்நாட்டு மக்கள் உணவு இறையாண்மையையும் அடைவதினை நோக்கமாக கொண்டிருக்கவேண்டும்



உணவு இறையாண்மை வெளிப் பாடுகளையும், மக்களின் உரிமை களை அடைய மேற்கொள்ளப்பட்டு வரும் தேவையான கொள்கைகள் மற்றும் திட்டங் களையும் ஒவ்வொரு நாடும் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். உதாரணமாக உணவுத் தன்னிறை வினை எட்டுவதற்கு உணவுப் பொருட்கள் வழங்கல், சேமிப்பு மற்றும் பகிர்வு குறித்து ஒவ்வொரு நாடும் தேவைப்படும் தேசிய அளவிலான கொள்கைகள், திட்டங்களை வைத்திருக்க வேண் டும்.

## பரிந்துரைக்கப்படும் விவாதங்களுக்கான கருத்துகளும், செயல்பாடுகளும்

## விவாதத்திற்கான குறிப்புகள்

*உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளை விளக்குதல் அல்லது உணவுப் பாதுகாப்பு கொள்கைகளை எடுத்துரைத்தல்.*

### உணவுக்கான உரிமை:

*தேசிய கொள்கைகளில் இந்தக் கோட்பாடு பிரதிபலிக்கப் பட்டுள்ளதா? கொள்கை வாக்குறுதிகள் மற்றும் செயல்பாடுகளுக்கு இடையே உள்ள இடைவெளி குறித்த விவாதம்.*

**செயல்பாடுகள் :** *பணியரங்கம்*

*கொள்கைகளை உருவாக்கும் அமைப்புகள், ஒருங்கிணைக்கப்பட்டக் குழுக்கள், மக்கள் இயக்கங்கள், தன்னார்வக் குழுக்கள், பொது மக்கள் மற்றும் வெகுசன தொடர்பு சாதனங்கள் எவ்வாறு உணவு இறையாண்மை குறித்த கோட்பாடுகளை வரவேற்கின்றன என்பதனை புரிந்துணர்தல்.*

*கொள்கை உருவாக்குபவர்கள், ஒருங்கிணைக்கப்பட்ட குழுக்கள், பொதுமக்கள், வெகுசன தொடர்பு சாதனங்கள் உணவு இறையாண்மை குறித்த கோட்பாடுகளை எவ்வாறு ஏற்றுக்கொண்டு உள்ளனர் என்பது குறித்த விவாதங்களை நடத்த பணியரங்கில் பங்கேற்றுள்ள பங்கேற்பாளர்களை மூன்று பிரிவுகளாக பிரித்து விவாதங்கள் நடத்தப்பட வேண்டும்.*

*1. கொள்கை விவாதங்கள், அரசு வெளியீடுகள், பொது மக்களின் விவாதங்கள், செய்திகள், கட்டுரைகளில் உணவு இறையாண்மை கோட்பாடுகள் எவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன? இதுகுறித்த மக்களின் கருத்து என்ன?*

*2. இக்கோட்பாட்டினை பிரபலப்படுத்த குழுக்கள் உள்ளனவா? உணவு இறையாண்மை குறித்த கருத்துகளை இக்குழுக்கள் எவ்வாறு மக்கள் முன் வைக்கின்றன? எப்படிப்பட்ட செயல்முறையை இவை ஏற்படுத்தி உள்ளன?*

*3. உணவு மற்றும் வேளாண் துறையில் தொடர்புடைய அரசு அதிகாரிகள், அரசு முகமைகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உணவு இறையாண்மை கோட்பாடுகள் முன் வைக்கப் பட்டுள்ளனவா? அதற்கான வாய்ப்புகள் இருந்துள்ளதா? அப்படி இருப்பின் அவர்களின் செயல்பாடுகள் எவ்வாறு இருந்தது?*

*4. வெகுசன தொடர்பு சாதனங்களில் உணவு இறையாண்மை குறித்த கோட்பாடுகள் விவாதிக்கப்பட்டுள்ளனவா? அப்படி இருப்பின் எந்தச் சூழலில்? எப்படிப்பட்ட கருத்துகள் வெளிப்பட்டன?*

மேற்கூறிய விவாதங்களில் இருந்து பெறப்படும் கருத்துகள், சிந்தனைகள் ஒவ்வொரு பங்கேற்பாளர் மனதிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் இக்கோட்பாட்டை பிரபலபடுத்தும் முயற்சிகளுக்கான திட்டங்களில் அவர்கள் தீவிரமாக பங்கேற்க முடியும்.

## குறிப்புரைகள் மற்றும் தொடர்ந்து வாசிக்க தொகுப்புகள்


La Via Campesina, "The right to produce and the access to land, Food Sovereignty: A Future without Hunger." Rome, Italy, November 1996.

"Profit for Few or Food for All: Revisited Five Year Later." FAO World Food Summit – 5 ½ years later. NGO/CSO Forum for Food Sovereignty, Rome, 8-13 June 2002.

La Via Campesina, "What is Food Sovereignty?" January 2003. Available at http://www.un-ngls.org/UNCTAD-What%20is%20food%20sovereignty.doc

"Statement on People's Food Sovereignty: Our World is not for salf, priority to People's Food Sovereignty." Cancun, Mexico, September 2003.

People's Food Sovereignty Network Asia Pacific (now People's Coalition on Food Sovereignty) and Pesticide Action Network Asia and the Pacific Primer on Food Sovereignty." November 2004. Available at http://www.foodsov.org/resources/food-sov-primer.pdf

Tujan, Antonio Jr. "Conceptual Issues on Food Sovereignty." Training on Food Sovereignty, Kolkata, India, 19-21 September 2005.

"Components of Food Sovereignty Platform and Program Implementation." Training on Food Sovereignty, Kolkata, India, 19-21 Setember 2005.

Windfuhr, Michael and Jennie Jonsen. 2005. Food Sovereignty: Towards democracy in localized food systems. Warwickshire: ITDG Publishing and FIAN-International.

IBON Databank and Research Center. 2005. WTO : Supreme Instrument for Neoliberal Globalization. Manila:IBON Books.

IBON Databank and Research Center. 2003. Privatization: Corporate Take-over of Government. Manila: IBON Books.

Websites:

People's Coalition on Food Sovereignty, http://www.foodsov.org

People's Food Sovereignty: The Agriculture and Trade Network, http://www.peoplesfoodsovereignty.org

La Via Campesina, http://www.viacampesina.org

## வடிவம் 2

# வேளாண்மை உணவு உற்பத்தி பகிர்வில் உணவு இறையாண்மை குறித்த கொள்கை வரைவுகள்

### நோக்கங்கள்

1. *உணவு மற்றும் வேளாண் உற்பத்தி வரையறையில் உணவு இறையாண்மையை மாற்றுக் கொள்கையாக ஏற்பது குறித்த விவாதம்.*


2. *உணவு இறையாண்மை குறித்த திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள்.*

**காலம்:** *3 மணிநேரம்.*

## I. உணவு மற்றும் வேளாண் உற்பத்தியில் உணவு இறையாண்மை குறித்த கொள்கை வரையறை

*உள்ளூர் உணவு உற்பத்தியாளர்கள் குறிப்பாக விவசாயிகள், மீனவர்கள், பூர்வகுடி சமூகங்கள் உணவு உற்பத்தியில் தன்னிறைவை எட்டுவதை உணவு மற்றும் வேளாண் கொள்கைகள் உறுதி செய்ய வேண்டும். உள்ளூர் உணவு உற்பத்தி மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் மக்களின் வாழ்க்கை தரம் மேம்படும். இப்படிப்பட்ட வழிமுறைகள் பன்னாட்டு அமைப்புகள், ஏற்றுமதி சார்பு வேளாண் மற்றும் மீன்பிடி தொழில்களுக்கு எதிராக அமையும். ஏற்றுமதியை மையமாக கொண்ட அணுகுமுறைகளால் பெரிதளவான சீரழிவு ஏற்பட்டுள்ளதுடன் மக்கள் ஏற்றுமதி சார்பு உணவு தொழில்களால் சுரண்டப்பட்டு வருகின்றனர்.*

*உணவு பொருட்கள் சேமிப்பை உறுதி செய்தல், உணவு உற்பத்திக்கு தேவைப்படும் ஆதாரங்களை பெறுதல், உற்பத்தியான பொருட்களை சமத்துவ முறையில் பகிர்ந்தளித்தல், நிர்வகித்தல் ஆகிய நடவடிக்கைகள் சமூகத் தேவைகளின் அடிப்படையிலும், கட்டுப்பாட்டிலும் இருக்க வேண்டும். இப்பணிகளில் சிறு உற்பத்தியாளர்கள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். மேலும் தொழிற்சார் முதலாளித்துவம் தவிர்க்கப்பட்டு அவர்கள் கையிலிருந்து உற்பத்தி வளங்கள் மீதான கட்டுப் பாட்டை விடுவிடுக்கவேண்டும்.*



## கொள்கைகளை பிரபலப்படுத்துதல், நீதி, விடுதலை, சனநாயகத்திற்கான போராட்டம்

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போல உணவு இறையாண்மை, உரிமைகள் அடிப்படையிலானது. உணவு மற்றும் வேளாண் கொள்கை களை பிரபலப்படுத்துவதில் மக்களின் அதிகாரம் வலியுறுத்தப்பட வேண்டும். இந்த கொள்கை பிரபலமாக்கல் அணுகுமுறைகள் அமைப்பு ரீதியான மாற்றங்களுக்கான போராட்டங்களுடன் தொடர்புபடுத்தப்பட வேண்டும் என்பது முக்கியமாகும். உணவு இறையாண்மை என்பது மக்கட்சார் கொள்கை களை பிரபலப்படுத்தும் செயல்பாட்டுடன் தொடர்பு கொண்டுள்ளது. மக்களின் சனநாயக ரீதியான போராட்டத்திற்கு ஒத்துழைப்பது. சமூக நீதி, சுதந்திரம் ஆகியவற்றை வன்கொடுமைகளில் இருந்தும், அடக்கு முறைகளில் இருந்தும் மீட்டெடுக்கும் மக்களின் நடவடிக்கைகளை நியாயப்படுத்துவது. மேலும் நிதர்சனமான சனநாயகத்தை ஏற்படுத்த வழிகோலுவது.

## உணவு இறையாண்மையும், உரிமைகளும்

உணவு இறையாண்மை தனி நபர் மற்றும் குழுக்களின் உரிமைகளை வலியுறுத்துதல் தொடர்பான கோட்பாடாகும். மனித உரிமைகளை உணர்வுபூர்வமாக அங்கீகரிப்பதை இக்கோட்பாடு வரவேற்கிறது. மக்கள் தங்கள் உரிமைகளுக்காக நேரடியாக செயல்பாட்டில் ஈடுபடுவதை ஆதரிக்கிறது. எனவே உணவு இறையாண்மை கொள்கைகளை பிரபலப் படுத்துவதன் மூலம் உணவு உற்பத்தியில் விவசாயிகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும். எப்படிப்பட்ட உணவு பொருட்கள் தங்களுக்கு தேவை என்பதை நுகர்வோர் உறுதி செய்வதை ஆதரிக்கும், தனிப்பட்ட நுகர்வோர் மற்றும் நாடுகள் தங்கள் உரிமைகளை அவர்களே பாதுகாத்துக் கொள்ளும் வகையிலும், வேளாண் மற்றும் உணவுப் பொருட்கள் இறக்குமதிகளை தவிர்க்கும் வகையிலும், விவசாயிகளை ஊக்குவிக்கும் பணியில் உணவு இறையாண்மை கோட்பாடுகள் முன் நிற்கின்றன.

### கொள்கைகளை பிரபலப்படுத்தும் அணுகுமுறையில் மக்களின் அதிகார சக்தியை ஊக்குவிக்கும் உணவு இறையாண்மை கோட்பாடு

மக்களின் அடிப்படை உரிமைகளை வலியுறுத்துவதையும் விஞ்சி சமூக, பொருளாதார கொள்கைகள் மக்களின் சனநாயக உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும் என்றும் வெறும் உணவு மற்றும் உணவு உற்பத்தி மீது மட்டும் அவர்களுடைய உரிமைகள் போதாது என்பதனையும் இக்கோட்பாடு முன்வைக்கிறது. வேளாண் மற்றும் மற்ற துறைகளின் கொள்கை உருவாக்கலில் பொது மக்களின் பங்கேற்பு அவசியம் என்பதையும் இக்கோட்பாடு வலியுறுத்துகிறது. உள்ளூர் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதுடன் நிலம், நீர், விதைகள், சேவைகள் மீது மக்களின் கட்டுப்பாடு அவசியம் என்பதையும் அறிவுறுத்துகிறது.

பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட சமூக மக்கள்,வேளாண் உற்பத்தி மற்றும் உணவு தொடர்பான துறைகள் சார்ந்த கொள்கைகள் உருவாக்கலில் முக்கிய பங்காற்ற வேண்டுமென்றும் உணவு இறையாண்மைக் கோட்பாடுகள் இயம்புகின்றன.


## II. உணவு இறையாண்மை தளத்தின் உட்கூறுகளும், திட்டங்களும் உணவு உற்பத்தி

உணவு உற்பத்தியில் தற்சார்பு, தன்னிறைவு ஆகிய காரணிகளை சார்ந்த கொள்கைகளும், சூழ்நிலைகளும் உள்ளன. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கு பொருளாதார சனநாயகம் மிக மிக அவசியமாகும்.

அதாவது நிதர்சனமான வாழ்க்கை முறைக்கான விவசாய தொழிலாளர்களின் உரிமைகளும் அது தொடர்பான கொள்கை ஆக்கங்களும் முன்னிலைப் பெறவேண்டும். அதேநேரத்தில் பன்னாட்டு அமைப்புகள் மற்றும் மேல்தட்டு வர்க்க மக்களின் ஆதிக்கங்கள் ஒழித்தெறியப்பட வேண்டும்.

இந்த சூழ்நிலையில் ஒரு அரசாங்கம் மக்கள் தரமான வாழ்க்கை முறையையும், தேவையான வருமானத்தையும் ஈட்டுவதை உறுதி செய்ய மறு உற்பத்தி முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இதன்மூலம் வேளாண் துறைக்கு தேவைப்படும் மூலதனத்தை வழங்குவதுடன் ஆதார வளங்களை நில முதலாளிகள் மற்றும் பன்னாட்டு அமைப்புகளின் கைகளில் குவிந்து விடாதபடி தடுக்க முடியும். உணவு உற்பத்தி திட்டங்கள் பெருவாரியான சிறு உணவு உற்பத்தியாளர்களின் செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இயங்க வேண்டும். குறிப்பாக ஒடுக்கப்பட்டத் துறைகள், நிலம், நீர், விதைகள், கால்நடைகள் ஆகிய ஆதார வளங்கள் மீது தங்கள் கட்டுப்பாட்டை கொண்டிருக்க வேண்டும்.

வேளாண்துறை செயல்பாடுகள் பல்லுயிர் தன்மையை அடிப் படையாக கொண்டிருக்க வேண்டும். இதன்மூலம் சுற்றுச்சூழல் மற்றும் சமூக நிலைப்பாடுகள் உறுதி செய்யப்படும். பல்லுயிர் அடிப்படை யிலான சுற்றுச்சூழல் முறைகள் உயிர் கள் மற்றும் மரபணு மாற்றம் ஆகியவற்றின் மீது காப்புரிமை கொணர்வதை எதிர்க்கின்றன. இதன்



அடிப்படையில் பாரம்பரிய வளங்களும், சுற்றுச்சூழலும் பாதுகாக்கப் படுவதுடன் உணவுப் பொருட்கள் உற்பத்தியும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு நாடும் தங்களுக்கென தனித்த உணவு உற்பத்தி திட்டங்களை கொண்டிருக்க வேண்டும். முக்கிய திட்டங்கள் அனைத்தும் பொருளாதார சனநாயகத்தையும், நிலைத்த தன்மை தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் முயலவேண்டும். இந்த திட்டங்கள் கூட்டு நடவடிக்கைகள் மூலம் சமூகத்தில் நிலவும் அடக்குமுறைகள், சுரண்டல் சூழ்நிலைகளை ஒழிக்க வேண்டும். நியாயமான வேளாண் சீர்திருத்தங்கள் நிலமற்ற விவசாய தொழிலாளர்களுக்கு இலவசமாக நிலம் வழங்குவது சம்மந்தப்பட்ட கேள்விகளுக்கான பதிலை முன் வைக்கும். மேலும் உற்பத்தி திறமையை வலுப்படுத்தும் வகையில் ஒட்டுமொத்த உற்பத்தி வளங்களையும் அவற்றின் மூலம் பகிர்வையும் உறுதி செய்யும்.

மீன்பிடித் தொழில் மற்றும் வனத்துறையில் கொண்டு வரும் சீர்த்திருத்த நடவடிக்கைகள் உள்ளூர் மக்களின் உரிமைகளை முன்னிலைப்படுத்த வேண்டும். இச்சமூகங்களின் மேம்பாட்டை உறுதி செய்வதுடன் கடல் மற்றும் வன வளங்கள் மீது அவர்களின் கட்டுப் பாட்டை வைத்திருக்க வழி வகை செய்ய வேண்டும்.

தொழிலாளர்களின் உரிமைகளும், அவர்களின் நலனும் மேம் படுத்தப்படுவதுடன் பாதுகாக்கப்பட வேண்டும். தகுதியான வேலை வாய்ப்புடன் கூடிய நியாயமான கூலியும், பணிப் பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும். கொத்தடிமைத்தனம், கந்துவட்டி முறைகள் முழுவதுமாக ஒழிக்கப்பட வேண்டும். நியாயமான கூலி கிடைக்கவும், பணித்தளங்களில் ஆரோக்கியமான சூழ்நிலைகள் நிலவவும் அது தொடர்பான உரிமைகளை முன்வைத்து போராடும் தொழிற் சங்கங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

மக்கள் சார்பு வளர்ச்சி திட்டங்களும், உயிரி பன்முக அடிப்படை யிலான தொழில் நுட்பமும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். மரபணு மாற்று தொழில் முறை மூலம் உற்பத்தி செய்வதும், பூச்சிக்கொல்லிகள் பயன்படும் முறைகளையும் ஒழிக்க வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களின் தேவைகளை போதுமான அளவு சந்திக்கும் வகையில் துறைச் சார்ந்த சிறப்புத் தன்மையுடன் கூடிய உணவு உற்பத்தி முறைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். அதேநேரத்தில் உணவு தானிய வகைகள் இம்மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

உணவு பதப்படுத்தல் துறை மேம்பாட்டில் சிறு உணவு பதப்படுத்தல் தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். ஏனெனில் இத்தகைய சிறுதொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள்

வெளிநாட்டு போட்டி காரணமாக தொழில்களில் இருந்து திட்டமிட்டு வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

உணவு மற்றும் வேளாண் துறையின் வர்த்தகம் மற்றும் முதலீட்டை முறைப்படுத்துதல் நடவடிக்கை நியாயமற்ற வெளிநாட்டு சக்திகளின் போட்டியை ஊக்குவிக்கும் வகையில் உள்ளன.

## உணவு பகிர்வு :

மக்களின் பொருளாதார, கலாச்சார தேவைகளை முன்னிறுத்தி உணவுப் பகிர்வு முறைகள் செயல்படுத்தப்பட வேண்டும். மக்களின் வருவாயையும் மனதில் கொள்ளவேண்டும். உணவுப் பகிர்வில் பொருளாதார சனநாயகத்தை கொண்டு வருவது என்பது கடினமான ஒன்றாகும். எனவே உணவுப் பகிர்வில் மக்களின் பங்கேற்பையும், ஆலோசனைகளையும் முன்னிலைப்படுத்தும் கொள்கைகளை கொண்டு வரவேண்டும்.

மக்கள் சார்பு மற்றும் செயல்பாட்டினை தன்னகத்தே கொண்டுள்ள தேசிய உணவு பகிர்வு திட்டங்களை செயல்படுத்த வேண்டும். இத்திட்டங்களின் ஆதரவை பெற்ற சமூக அடிப்படையிலான உணவுத் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும். திறமையான உள்ளூர் உணவு தானிய வகை சேமிப்பு முறைகள் மூலம் போதுமான உணவுப் பொருட்கள் கையிருப்பில் இருக்கும் வகையில் அரசாங்கம் செயல்பட வேண்டும்.

அடிப்படை உணவுப் பொருட்கள் மக்களை எட்டும் வகையில் உணவுப் பகிர்வு திட்டங்கள் அமைய வேண்டும். இதன்மூலம் உணவு தானிய விலைகள் கட்டுப்பாட்டில் இருக்கும். இலவசமாக மானிய விலையில் கெட்டுப்போன உணவு தானியப் பொருட்களை ஏழைகளுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் வழங்கும் திட்டங்களை அரசு கைவிட வேண்டும். ஏகபோக விலை நிர்ணயத்தையும், பெரிய தொழில் துறைகளின் கட்டுப்பாட்டை தவிர்க்க தேவைப்படும் வர்த்தக மற்றும் முதலீட்டு திட்டங்களை முறைப்படுத்துதலுக்கு தேவைப்படும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்மூலம் உள்ளூர் சந்தைகளும் அவை தொடர்புள்ள முக்கிய உணவு உற்பத்தியாளர்களும் பாதுகாக்கப்பட வேண்டும்.

## சுகாதாரமும், ஊட்டச்சத்தும்

வறுமை மற்றும் ஊட்டச்சத்தின்மை நிலைமைகளை முழுவதுமாக களைய நிகழும் போராட்டங்களில் உணவு இறையாண்மை மைய அங்கம் வகிக்கிறது. மக்களுக்கு ஊட்டச்சத்து வழங்குதல், உணவு பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியன குறித்த முக்கிய கொள்கைகள் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்தினை அடிப்படையாக கொண்டுள்ளன.

குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் போன்றவர்கள் மீது சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். பாலியல் வேறுபாடுகள் பொருளாதார, சமூக உரிமைகள் மறுக்கப்பட்ட இம்மக்களே பெரும்பாலும் வறுமை மற்றும் பசிப்பிணிகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**முக்கிய திட்டங்களாவன** மக்கள் சார்பான, ஏழை மக்களுக்கான பிற்படுத்தப்பட்ட வளர்ச்சியுறா மண்டலங்கள், சமூக நிலைகள் ஆகியனவற்றை முதன்மைப்படுத்தி செயல்படும் ஊட்டச்சத்து திட்டங்கள், ஒவ்வொரு வீட்டிற்கும், சமூகத்திற்கும் இலவசமாக குடிநீர் வழங்குவதற்கான வசதி, பன்னாட்டு அமைப்புகள் பலன் பெறுவதை தடுப்பதுடன் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல், உணவு பாதுகாப்பு முறைமைகள் அறிமுகப்படுத்தப் படுவதுடன் குழந்தைகளுக்கு தாய்பால் வழங்குதலையும் ஊக்கப்படுத்தும் திட்டங்கள் இவற்றில் அடங்கும்.

## உணவு நிவாரணப் பணிகள்

உணவு நிவாரணம் என்பது மக்கள் சார்பானதும், தன்னிச்சையாக செயல்படக் கூடியதுமாய் இருக்க வேண்டும். எந்தவித அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளின் ஆக்கிரமிப்பின்றி உண்மையிலே இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் வாழும் மக்களுக்கு நேர்மையாக நிவாரணப் பொருட்கள் கிடைக்க வழி வகை செய்ய வேண்டும். குறிப்பாக வறுமையினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கும், இயற்கை பேரிடரால் பாதிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் பகுதிகளுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும். உணவு என்பது ஒரு பகுதியின் மீது அடக்குமுறைகளை கட்டவிழ்க்கவோ அல்லது போரினை தொடுக்கவோ தேவைப்படும் ஆயுதமாக பயன்படுத்தப்படக்கூடாது.

உணவு தன்னிறைவு மேம்பாட்டிற்கு உதவும் வகையில் உணவு வழங்கலில் சர்வதேச கூட்டுறவும், நிவாரண உதவியும் உணவுப் பொருட்கள் வழங்களில் தன்னிறைவும், மேம்பாட்டை உள்ளடக்கிய தாகவும் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட சூழல் உணவுப் பொருட்களை ஓரிடத்தில் கொண்டு சென்று குவிக்க பயன்படும் முகமூடியாக இருக்கக் கூடாது. உணவு உதவி என்ற பெயரில் உள்ளூர் சந்தைகளை கட்டுப் படுத்த முயலும் சர்வதேச முகமைகளை வலுப்படுத்தும் சூழ்நிலைகள் உருவாகவும் வழி விடக்கூடாது.

## பரிந்துரைக்கப்படும் விவாதங்களுக்கான கருத்துகளும், செயல்பாடுகளும் விவாதத்திற்கான குறிப்புகள்

**உணவுத் திட்டங்கள்** குறைப்பாடுகளும், இடைவெளிகளும். நடைமுறையில் உள்ள அரசு உணவுத் திட்டங்களை ஆய்வு செய்தல். குழு விவாதங்கள் மூலம் உணவு இறையாண்மை வரையறையின் கீழ் ஐந்து கொள்கைப் பரிந்துரைகளை முன்வைத்தல்.

## செயல்பாடுகள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் ஊக்குனர்களும், பங்கேற்பாளர்களும் தற்பொழுது நடைமுறையில் உள்ள உணவு, வேளாண் துறை சார்பான கொள்கைகள் மற்றும் உணவு இறையாண்மை வரையறையில் காணப்படும் எதிர்மறையான மாற்றங்களை குறிப்பிடவேண்டும். இச்செயல்பாடுகள் மூலம் அடைய வேண்டிய கொள்கை குறிப்புகளை கண்டறிய வேண்டும். அட்டவணையின் முதல் பிரிவில் ஊக்குனர்கள் பல்வேறு பிரச்சனைகளை எடுத்துரைக்கலாம். கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையின் முதற் பகுதியில் சில பிரச்சனைகள் முன் வைக்கப்பட்டுள்ளன. இது குழு செயல்பாட்டினை துவக்கி வைக்க ஏதுவாக இருக்கும்.

# தற்போதுள்ள கொள்கை வரையறை மாறாக உணவு இறையாண்மை வரையறை

| காரணிகள் | தற்போதுள்ள கொள்கை வரையறை | உணவு இறையாண்மை வரையறை |
|---|---|---|
| உற்பத்தி முன்னுரிமை | ஏற்றுமதிக்கான பணப்பயிர் | உள்ளூர் நுகர்விற்கான உணவு, உணவு உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி |
| வேளாண் சீர்திருத்தம் | | |
| விளை பயிர்களின் மதிப்பு | | |
| உழைப்பு | | |
| தொழில்நுட்பம் | | |
| வர்த்தகம் | | |
| முதலீடு | | |
| உணவுப்பொருட்கள் விலை | | |
| உணவுப் பாதுகாப்பு | | |
| உணவுப் பொருட்கள் உதவி | | |

## செயல்பாடுகள்

*மும்முனைப் பணி - வேளாண்மை மற்றும் உணவுத் துறைகளில் காணப்படும் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட குறிப்பிட்டப் பிரச்சனைகளை பங்கேற்பாளர்கள் கண்டறிய பணிக்க வேண்டும். (உதாரணமாக அதிக விலையில் விதைகள்) இவற்றினை ஒரு காகிதத்தில் எழுதிக்கொள்ளவும். பங்கேற்பாளர்களை மூன்று குழுக்களாக பிரிக்கவும். ஒவ்வொரு குழுக்கும் பிரச்சனைகள் சம்மந்தப்பட்ட அட்டவணையை கொடுத்து அவர்கள் அதனை விவாதிக்கவும் அந்தப் பிரச்சனைகளை உணவு இறையாண்மை மூலமாக எவ்வாறு கையாள்வது என்பது குறித்தும் விவாதிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பின்பு தங்கள் விவாதத்தின் கருப்பொருளை 'வடிவத்தில்' அறிவிக்க சொல்ல வேண்டும். இதனை பங்கேற்பாளர்கள் நேரமிருப்பின் அவர்கள் விரும்பும் முறையில் படைக்கலாம்.*

## குறிப்புரைகள் மற்றும் தொடர்ந்து வாசிக்க தொகுப்புகள்

Tujan, Antonio Jr. "Components of Food Sovereignty Platform and Program Implementation." Training on Food Sovereignty, Kolkata, India, 19-21 September 2005.

Pesticide Action Network Asia and the Pacific and IBON foundation, Inc. 2002 "Convention on Food Sovereignty: A discussion Paper." Available at http://www.panap.net/docs/campaign/conventiononfsov.pdf.

The People's Convention on Food Sovereignty. Available at http://www.aprnet.org/index.php?a=show&t=conferences&c=Asia-Pacific%20Peoples%20Convention%20on%20Food%20Sovereignty&i=18. Also printed in People's Caravan 2004 for Food Sovereignty Proceedings, Pesticide Action Network Asia and the Pacific, February 2005.

Websites

Pesticide Action Network Asia and the Pacific, http://www.panap.net

Asia Pacific Research Network, http://www.aprnet.org

# வடிவம் 3
# மக்களின் உணவு இறையாண்மை குறித்த கொள்கை ஆதரவு

## நோக்கங்கள்

1. மக்களின் உணவு இறையாண்மை குறித்த கொள்கை ஆதரவு மீதான ஒரு கண்ணோட்டம்.

2. உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச ஆதரவு மீதான விவாதம் மற்றும் வெற்றிகரமான உணவு இறையாண்மை கொள்கை ஆதரவு செயல்பாடுகளில் உள்ள காரணிகளை வெளிப்படுத்துதல்.

**காலம் :** *3 மணி நேரம்*


## I. உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச உணவு இறையாண்மை ஆதரவு செயல்பாடுகள்

உணவு இறையாண்மை குறித்த முழுமையான வடிவத்தை எட்டுவது என்பது அதற்கு சமமான கடுமையான திட்டங்களை உள்ளடக்கியதாகும். வறுமை, பசிப்பிணி ஒழிப்பு மற்றும் வாழ்க்கைக்கு ஏற்ற நிலைத்த வளர்ச்சி வடிவங்களை ஏற்படுத்துவது குறித்த எந்தவொரு திட்டமும், முன்வடிவமும் இதுதொடர்பான பிரச்சனைகள் மற்றும் தடைகள் குறித்து எடுத்துச் சொல்லியாக வேண்டும். இவை ஒரு நாட்டின் அல்லது சர்வதேச கொள்கை உருவாக்கலில் முக்கிய அங்கம் வகிக்கின்றன. தற்பொழுது தனிப்பட்ட ஒரு நாடு மற்றும் சர்வதேச கொள்கை ஆகிய இவ்விரண்டுக்கும் இடையே பெரிய வேறுபாட்டினை தெளிவாக காண முடியாத சூழ்நிலை உள்ளது. ஏனெனில் பெரும்பாலான நாடுகளின் தேசிய கொள்கை உருவாக்கங்கலில் சர்வதேச சக்திகள் பெருமளவு தங்களது ஆதிக்கத்தை செலுத்துகின்றன.

உணவு இறையாண்மை அரசியல் வெளிப்பாட்டில் இருந்து உருவாகி உள்ளூர் சமுதாயங்களின் சுய உறுதிப்பாட்டையும், சுயசார்பையும் முக்கியத்துவப்படுத்தி உள்ளூர் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயல்கிறது. எனவே உணவு இறையாண்மை பற்றிய வரையறை கொண்டுள்ள கொள்கை முன்வடிவம் சர்வதேச வேளாண் மற்றும் வர்த்தக கொள்கைகளில் தேவைப்படும் மாற்றங்களையும் எடுத்துரைக்க வேண்டும். ஏனெனில் முக்கிய சர்வதேச நிறுவனங்கள் அவற்றின் உடன்படிக்கைகளில் புரட்சிகரமான மாற்றங்கள் தேவைப்படுகின்றன.

எனவே இவற்றிலிருந்து உணவு இறையாண்மை பற்றிய ஆதரவு செயல்பாடுகள் உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச சூழ்நிலைகளுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். உள்ளூர் அளவில் நோக்கும் பொழுது உணவு இறையாண்மை ஆதரவு செயல்பாடுகள் பொது மக்கள் தினமும்

சந்தித்து வரும் உணவு மற்றும் வாழ்க்கை முறைகளில் உள்ள பிரச்சனைகளை தொடர்புபடுத்தி பார்ப்பதுடன் மக்கள் ஏற்று பின்பற்றும் வகையில் தோதான கொள்கை முன்வடிவங்களை முன்வைக்க வேண்டும். எனவே உணவு இறையாண்மை வரையறை ஒரு குறிப்பிட்ட சமூகம் தன்னுடைய பிரச்சனைகள் எவ்வாறு சந்திக்கப்படுகின்றன என்பதனை வெளிப்படுத்துவதை முக்கிய நோக்கமாக கொண்டிருக்க வேண்டும்.



தேசிய அளவில் இந்த ஆதரவு செயல்பாடுகள் பல துறைகளில் இருந்து பங்கேற்பைப் பெற்று பரிமளிக்க வேண்டும்; வேளாண்துறை யினர், மீனவர்கள், பூர்வகுடிகள், பெண்கள், ஆகியோரை குறிப்பிடலாம். இவர்களின் தேவைகள் அடிப்படையிலான தேசிய அளவிலான உணவு இறையாண்மை திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும். தேசிய அளவிலான இப்படிபட்டதொரு வரையறை வேளாண் துறை நீர் நிலைகள் சம்மந்தப்பட்ட துறைகள், பசுமையான நில வளம் ஆகியவற்றில் தேவைப்படும் சீரமைப்பு திட்டங்களை முன் வைக்க வேண்டும்; உணவு உற்பத்தி திட்டங்கள்; உணவு உற்பத்தியில் வேளாண் சுற்றுச்சூழல் மேம்பாடு; உணவு பகிர்வு திட்டங்கள்; வர்த்தகம் மற்றும் முதலீட்டை முறைப்படுத்துதல் திட்டம்; அனைத்து தரப்பு மக்களிடையே உள்ள வருவாய் மற்றும் வாழ்க்கை முறை ஆகியன இவற்றில் அடங்கும்.

ஆதரவு செயல்கள் மற்றும் முகாம்கள் நடத்தவும், கூட்டமைப்பு வேலைகளை பரிந்துரைக்கவும், தேசிய அளவிலான திட்டம் அடித்தளமாக செயல்பட வேண்டும். உணவு இறையாண்மையில் முக்கிய பிரச்சனைகளை முன்வைத்த கொள்கை வரைவுகளை (உதாரணமாக விதைகள் கிடைத்தல், வேளாண் பொருட்கள் மற்றும் ஆபத்து தரக்கூடிய பூச்சிக்கொல்லிகளை அந்நிய நாடுகளிலிருந்து குவித்தல்) வடிவமைத்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் களிடையே கொண்டு சென்று அவர்கள் மூலமாக நாடாளுமன்ற, சட்டமன்ற அவைகளில் இதுகுறித்த விவாதங்களை, செயல்பாடுகளை உருவாக்க வேண்டும்.

உணவு இறையாண்மையுடன் தொடர்புடைய மக்கள் மாநாடு ஒரு ஆவணமாக உருவாக்கப்பட்டு அரசியல் ரீதியாக தேசிய மற்றும் சர்வதேச அதிகார சக்திகளுக்கு சவால்விடக் கூடிய தன்மையுடன் வெளிப்பட வேண்டும். சர்வதேச அளவிலான மக்கள் மாநாடு சம்மந்தப்பட்ட முன்முயற்சிகள் அனைத்து தரப்பு அரசாங்கங்களால் சட்டப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படாதபட்சத்தில் அதனை நடைமுறைக்கு கொண்டு வருவது என்பது சாத்தியமில்லை.

அதற்கு மக்களின் சக்தியும் மிக அவசியமாகும். இன்றைய சூழ் நிலையில் உலகளவில் உள்ள மக்களின் அங்கீகாரத்தை உணவு இறை யாண்மை பெற்று வருகின்றது. இந்த மாநாட்டு கருத்துகள் பல்வேறு உணவு இறையாண்மை சம்மந்தப்பட்ட காரணிகளை முன்வைப்பதுடன், உணவு மற்றும் வேளாண் துறைகளில் பன்னாட்டு அமைப்புகள் ஈடுபடுவதை எதிர்ப்பதுடன் புதிய தாராளமய உலகமயமாக்கல் சூழ்நிலை களின் கருவிகளாக செயல்பட்டு வரும் பன்னாட்டு நிதியம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக நிறுவனம் ஆகியவற்றையும் எதிர்க்கிறது.

உலகின் பல்வேறு சமூக இயக்கங்கள் இன்று உணவு இறை யாண்மை கோட்பாட்டிற்கு தங்களது ஆதரவை தெரிவித்துள்ளன. உணவு இறையாண்மை ஆதரவு செயல்பாடுகளுக்கு ஏற்பட்டுள்ள பலதரப்பு ஒத்துழைப்பு இன்று உலகளவில் ஏற்படுத்தப்படும் கொள்கைகளின் ஆக்கப்பூர்வ மாற்றங்களை கொண்டு வருவதில் முக்கிய பணியாற்றுகின்றன.

## II. முகாம்களுக்கான முக்கிய கருத்துகளும், இலக்குகளும்

### சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகளின் முகமைகள்

வளர்ந்து வரும் பல்வேறு நாடுகளில் உலக சர்வதேச நிதியமும், உலக வங்கியும் அமைப்பு சரியீட்டு திட்டத்தின் கீழ் பல கொள்கைகளை 1980-ஆம் ஆண்டுகள் முதல் நடைமுறைப்படுத்தி வருகின்றன. உணவு மற்றும் வேளாண் துறையை பொருத்த வரையில் வர்த்தக அடிப்படையிலான உணவுப் பாதுகாப்பு என்ற கொள்கை தொகுப்பை உலக வங்கி நடைமுறைப்படுத்தி வருகிறது.

உலக வங்கியின் சர்வதேச நிதியமும் கடன்கள் வழங்குவதன் மூலமும் பல நாடுகளுக்கு கட்டுப்பாடுகளை விதித்து வருவதுடன் அந்த நாடுகளின் உள்ளூர் வேளாண் சந்தையை இறக்குமதி பொருட்களுக்காக திறந்து வைக்கும்படி கட்டாயப்படுத்தி வந்துள்ளன.

ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற மற்ற சர்வதேச நிதி நிறுவனங்களும் புதிய பொருளாதார கொள்கைகளை வேளாண்மை மற்றும் உணவுத் துறைகளில் செயல்படுத்தி வருகின்றன. அதேபோல ஐக்கிய நாடுகள்

சபையின் முகமைகளான உணவு மற்றும் வேளாண் நிறுவனம் ஐ.நா சபையின் வளர்ச்சித்திட்டங்கள் ஆகியன சர்வதேச நிதி நிறுவனங்கள் உருவாக்கியுள்ள வர்த்தக அடிப்படையிலான பாதுகாப்பு என்ற வரையறையை பின்பற்றி வருகின்றன.

உணவு இறையாண்மை பற்றிய கொள்கை ஆதரவு முகாம்கள் அமைப்பு சரியீட்டு திட்டத்தின் கட்டுப்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க அழைப்பு விடவேண்டும். வறுமை குறைப்பு திட்ட அறிக்கைகளும் இவற்றுள் அடங்கும். இத்திட்டம் புதிய தாராளமய மறுசீரமைப்பு பணிகளை ஊக்குவிப்பதுடன் அதன்மூலம் பல சர்வதேச கழகங்கள் பலன்களை அனுபவிக்க உதவுகிறது. அதேநேரத்தில் சிறிய அளவிலான உற்பத்தியாளர்களை பாதிப்பதுடன் அங்கு வழங்கப்படும் மானியங்களை குறைக்க வழிவகுப்பதுடன் தனியார் சேவைகளை ஊக்குவிக்கிறது. உணவு பாதுகாப்பு அடிப்படையிலான புதிய தாராளமய வர்த்தக கொள் கைகளை ஐக்கிய நாடுகள் கைவிட்டு உணவு இறையாண்மை கோட்பாடு களை மேம்படுத்தும் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வலி யுறுத்த வேண்டும்.

## சுதந்திர வர்த்தக செயல்பாடுகள்

உலக வர்த்தக நிறுவனத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள வர்த்தக கொள்கைகள் சர்வதேச உடன்படிக்கைகளை உள்ளடக்கியதாகவும் அவற்றினை பல்வேறு நாடுகள் பின்பற்றவும் வகைசெய்கின்றன. அப்படி பின்பற்றாத பட்சத்தில் சம்மந்தப்பட்ட நாடுகள் பிரச்சனைகளை தீர்க்கும் செயல்பாடுகள் என்ற அடிப்படையில் பொருளாதார கட்டுப்பாடுகளை சந்தித்தாக வேண்டும்.

வர்த்தக கொள்கைகள் சம்மந்தப்பட்ட சட்டங்கள் உணவு மற்றும் வேளாண் துறைச் செயல்பாடுகளை பெரிதளவும் பாதித்துள்ளன. இப்படி பட்ட சட்டங்கள் வேளாண்மை சம்மந்தப்பட்ட உலக வர்த்தக நிறுவனத் தின் உடன்படிக்கைகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவை தேசிய கொள்கைகளை கட்டுப்படுத்துவதுடன் பல்வேறு அளவில் உணவுப் பொருட்கள் மீதான விலைகளையும் நிர்ணயம் செய்கின்றன. இதன்மூலம் மக்களின் உணவு இறையாண்மை கோட்பாடுகள் பின்தள்ளப்பட்டு வருகின்றன.

உலக வர்த்தக நிறுவனத்தின் சட்டத் திட்டங்கள் பல்வேறு நாடுகளின் கொள்கைகளையும், செயல்பாடுகளையும் பாதித்து வருகின்றன. உணவுப் பாதுகாப்பு முறைகள், அறிவுசார் சொத்துரிமை, வேளாண் மானியங்கள், உணவுப் பொருட்களுக்கான ஆதரவு விலை போன்றவற்றை இவை பெரிதும் பாதித்துள்ளன. உலக வர்த்தக நிறுவனம் மற்றும் பல சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண் துறை தாராளமயமாக்கல் உலகின் பல வளரும் நாடுகளில் உள்ள சிறு

மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் உலக சந்தையில் நேரடியாக போட்டிப்போடும் சூழ்நிலைகளை உருவாக்கி உள்ளன. ஏழை நாடுகளில் உள்ள சிறு உற்பத்தியாளர்கள் தங்களிடையே குறைந்த அளவில் கொண்டுள்ள பாசன வசதி விதைகள், கால்நடைகள் ஆகியவற்றை உற்பத்திக்கான வளங்களாக கையாண்டு சர்வதேச அளவில் பெருமளவு மானிய உதவியுடன் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் வளர்ந்த நாடுகளின் விவசாயிகளுடன் போட்டிப்போடும் சூழ்நிலை உருவாகியுள்ளது. உதாரணமாக வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் மெக்சிகோ நாட்டில் உள்ள பாரம்பரிய மக்கா சோள உற்பத்தியை பின்பற்றி வரும் விவசாயிகள் நான்கு ஹெறக்டேர்கள் நிலத்தை பன்படுத்தி உற்பத்தி செய்து வருகின்றனர். ஆனால் இவர்கள் அமெரிக்க நாட்டின் மானிய உதவியுடன் ஆயிரம் ஹெறக்டேர் நிலத்தில் சோளம் விளைவிக்கும் விவசாயிகளுடன் போட்டிப்போட வேண்டியுள்ளது.

உலக வர்த்தக நிறுவனம் உணவு மற்றும் வேளாண் துறை செயல்பாடுகளிலிருந்து முழுவதுமாக தன்னை விளக்கிக்கொள்ள வேண்டும் என்று உணவு கோட்பாடு வலியுறுத்துகிறது. அத்துடன் மக்களுக்கு நியாயமான விலைகளை வழங்கி உணவு இறையாண்மையை முன்வைத்து செயல்படும் புதியதொரு பன்முக வர்த்தக திட்டத்தினை கொண்டு வரவேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

அதேபோல இருதரப்பு மற்றும் மண்டல வர்த்தகம் முதலீட்டு உடன்படிக்கைகள் உலக வர்த்தக நிறுவனத்தின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் முழுவதுமாக விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். வர்த்தகம் மற்றும் முதலீடு சம்மந்தப் பட்ட தாராளமயமாக்கல் காரணிகளை உணவு இறையாண்மையை வலியுறுத்தி வரும் ஆதரவாளர்கள் கவனமாக கண்காணிக்க வேண்டும்.

## தொழில் மயமாக்கப்பட்ட வேளாண்முறைகள்

வேளாண்துறையில் தாராளமயமாக்கல் இன்று விவசாய நிலங்களையும், வளங்களையும் பெரிய பண்ணை முதலாளிகளிடம் கொண்டு குவித்துள்ளன. வேளாண் சார்பு தொழில்கள், அதனுடன் தொடர்புடைய வர்த்தக செயல்பாடுகள் அனைத்தும் அப்படிப்பட்ட பெருமுதலைகளிடம் முடங்கி உள்ளன. சர்வதேச நிதிக் கழகங்கள் உணவு செயல் துறைகள், சந்தைகள், உலக உணவு உற்பத்தி ஆகியன மீது தங்களது கட்டுப்பாடுகளை கொண்டு வந்துள்ளன. இடுபொருள் துறைகள், உணவு வர்த்தகம் மற்றும் உணவுப் பதப்படுத்தும் துறைகளை ஒன்றாக இணைப்பது கொள்முதல் செய்வது போன்ற நிகழ்வுகளும் இன்று நடந்தேறி வருகிறது. பல்வேறு தரப்பட்ட விதை நிறுவனங்களை வேளாண் இரசாயன நிறுவனங்கள் இன்று உருவாக்கி உள்ளன. பொது

மக்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பல்வேறுத் துறைகள் அறிவுசார் சொத்துரிமை சட்டங்களின் கீழ் கொண்டு வரப்பட்டு ஏகபோக நிலைமைகளை உருவாக்கியுள்ளது. அதன்மூலம் பாரம்பரிய பொருட்கள், வாழ்க்கை முறைகள், விதைகள், கால்நடை வளர்ப்புகள் போன்றவை கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த செயல் வடிவத்தின் கீழ் சுதந்திரமாக விதைகளையும், கால்நடை உற்பத்திகளையும் பகிர்ந்துக் கொள்ள முடியாது. அதேநேரத்தில் பல சர்வதேச நிறுவனங்கள் விவசாயிகளின் பாரம்பரிய அறிவை திருடி தங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்ட சூழ்நிலைகளும் உருவாகியுள்ளன.

உணவு வர்த்தகம் என்ற பெயரில் தானிய வகைகள் மற்றும் சோயா பீன்ஸ் உற்பத்தி போன்றவை ஒரு சில சர்வதேச நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன. மற்ற தானிய உற்பத்தி களுக்கும் இதே நிலைதான் ஏற்பட்டுள்ளது. இவற்றுள் வாழை, பைனாபிள், காபி, கொக்கோ ஆகியனவற்றை குறிப்பிடலாம். கடந்த இருபது ஆண்டுகளில் உணவு பதப்படுத்தல் மற்றும் அவை தொடர்பான துறைகளில் சர்வதேச நிறுவனங்கள் தங்கள் கட்டுப்பாட்டையும், ஆதிக்கத்தையும் அதிகரித்துள்ளன. பண்ணை இடுபொருள்கள் மீது சிறு விவசாயிகள் தங்கள் கட்டுப்பாடுகளை இழந்துள்ளதுடன், உற்பத்தி பொருட்கள் மீதான விலை நிர்ணயத்திலும் இது தொடர்பான வர்த்தக செயல்பாடுகள் மீதும் தங்களது கட்டுப்பாட்டை இழந்துள்ளனர்.

எனவே உணவு இறையாண்மைக் குறித்தான பரிந்துரைகள் தேசிய மற்றும் சர்வதேச வர்த்தக கொள்கைகளில் சர்வதேச அமைப்புகள் மற்றும் சர்வதேச நிறுவனங் களின் ஏகாதிபத்திய போக்கை முடிவுக்கு கொண்டு வரும் நிலைகளை எடுத்துரைக்க வேண்டும். இப்படிப்பட்ட பன்னாட்டு அமைப்புகள் உணவுப் பொருட்கள் அவற்றின் உற்பத்தி அது தொடர் பான விலை நிர்ணயம் ஆகிய காரணிகளை தங்களது கட்டுப்பாட்டில் கொண்டுள்ளன என்பதனை கவனிக்க வேண்டும்.



## III. உணவு இறையாண்மை குறித்த கொள்கை ஆதரவு செயல்பாடு களில் உள்ள காரணிகள்

### கல்வி மற்றும் கூட்டமைப்பு :

உணவு இறையாண்மை குறித்த மக்கள் மாநாடு ஒரு அரசியல் கருவியாக செயல்பட்டு மக்கள் மத்தியில் கல்வி அறிவினை வளர்க்கும் கருவியாக செயல்பட வேண்டும். இந்த ஆவணம் பரந்துப்பட்ட அளவில் பிரபலப்படுத்தப்

பட்டு சட்டமன்ற, நாடாளுமன்ற அவைகளில் சமர்ப்பிக்கப்பட்டு போதுமான ஆக்கத்தையும், ஊக்கத்தையும் பெறவேண்டும். தேசிய அளவில் உணவு இறையாண்மை குறித்த திட்டம் வரையறுக்கப்பட்டு மக்கள் கூட்டமைப்பு மற்றும் முகாம்களை உருவாக்குவதற்கான அரசியல் தளமாக பயன்படுத்தப்பட வேண்டும்.

பெருமளவிலான வாசகர்களை சென்றடையும் வகையில் பிரசித்திப் பெற்ற வடிவங்களில் வேளாண்மை மற்றும் உணவு சம்மந்தப்பட்ட காரியங்கள் உணவு இறையாண்மையின் தேவையை வலியுறுத்தும் வாசக பிரதிகள், புத்தகங்கள் வெளியிடப்பட வேண்டும். பொதுமக்களை சென்றடையும் வகையில் கருத்துப்பட்டறைகள், கருத்தரங்கங்கள் போன்றவை ஒருங்கிணைக்கப்படுவதுடன் பொது மக்கள் இது குறித்த கல்வி அறிவுப் பெற்று விவாதங்கள் பெரிய அளவில் நடத்தப்பட வேண்டும். இதன்மூலம் பல கூட்டமைப்புகளும் மக்கள் மத்தியில் உருவாக வேண்டும்.

## ஆதரவு கூட்டங்கள் :

உணவு மற்றும் வேளாண் துறைகளில் சீர்திருத்தக் கொள்கைகள் குறித்த விவாதங்களில் உணவு இறையாண்மை ஒரு மாற்று முறையாக பிரதிபலிக்கப்பட வேண்டும். இதுதொடர்பாக கொள்கை ஆவணங்களை உருவாக்கி அதனை சட்டமன்ற அமைப்புகள் மற்றும் அரசு அதிகாரி களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

இதன்மூலம் உணவு இறையாண்மை வரையறைக்கு உட்பட்ட கொள்கைகள் சம்மந்தப்பட்ட விவாதங்களை ஊக்குவிக்க முடியும். சீர்திருத்தங்கள் குறித்த செயல்பாடுகள் பற்றிய விவாதங்களில் கொள்கை உருவாக்கும் அதிகாரம் படைத்தவர்கள் பங்கேற்கும் வகையில் அரசியல் சட்டபூர்வ அமைப்புகளில் விவாதங்களும், தொடர்புகளும் உருவாக்கப் பட வேண்டும்.

இதைபோலவே விவசாயம் மற்றும் உணவு சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் தொடர்பான கலந்தாய்வுகள் மற்றும் பொது மக்கள் குறைத் தீர்ப்பு நிகழ்வுகளிலும் இந்தக் கருத்தாக்கத்தை கொண்டுச் செல்ல வேண்டும்.

## ஒருங்கிணைத்தல்

உணவு மற்றும் வேளாண் துறையில் புதிய தாராளமயமாக்கல் கொள்கைகள் மூலம் மாற்றங்களை கொண்டு வரும் காரணிகளுக்கு எதிராக விவசாயத் தொழிலாளர்கள், மீனவர்கள், பூர்வகுடி மக்கள் மற்றும் பல உணவு உற்பத்தியாளர்கள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இந்த ஒருங்கிணைப்பின் நோக்கம் தற்போது நிலவி வரும் கொள்கைகளில் மாற்றங்களை கொண்டு வரவும், அடுத்து முன் வைக்கப்பட உள்ள கொள்கை மாற்றங்களை தடுக்கவும் வேண்டும்.

உலக வர்த்தக நிறுவனம் மற்றும் சர்வதேச வர்த்தக நிறுவனங்கள் ஆகியன குறித்த விவாதங்கள், முகாம்கள் நடத்தப்பட வேண்டும். அதேநேரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு அமைப்புகளான விவசாயம், உணவு, தொழிலாளர் நலன், சுகாதாரம், பூச்சிக்கொல்லி தொடர்புடைய நிறுவனங்களிலும் உணவு இறையாண்மைக்கு சார்பான ஆதரவு காரணிகளை கொண்டுச் செல்ல வேண்டும். சர்வதேச அளவில் மற்ற சூழ்நிலைகளில் உணவு இறையாண்மை கோட்பாட்டிற்கு ஆதரவான தகவல்கள் கொண்டுச் செல்லப்பட்டு முகாம்கள் நடத்தப்பட வேண்டும். இதன்மூலம் பலதரப்பட்ட மக்களின் ஆதரவினை இக்கோட்டிபாட்டிற்கு சாதகமாக திரட்ட முடியும்.

## பரிந்துரைக்கப்படும் விவாதங்களுக்கான கருத்துகளும், செயல்பாடுகளும்

### *செயல்பாடுகள் :*

### *பணியரங்கம் :*

பங்கேற்பாளர்களை மூன்றுக் குழுக்களாக பிரிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் தாங்கள் சந்திக்கும் உணவு சம்மந்தப்பட்ட உள்ளூர் சமூகப் பிரச்சனைகளை கண்டறிய வேண்டும். இக்குழுக்கள் உணவு இறையாண்மை அடிப்படையிலான கொள்கை முன்வடிவை தயார்படுத்த வேண்டும். (உதாரணமாக தற்பொழுது நிலவி வரும் கொள்கைகளை மறு சீரமைப்பது அல்லது மாற்றுவது அத்துடன் மாற்று முறையையும் எடுத்துரைப்பது) இதன்மூலம் பிரச்சனைகள் கண்டறியப்பட்டு விவாதிக்கப்பட்டு புதிய கொள்கைப் பரிந்துரையை உருவாக்க திட்டமிடப்பட வேண்டும்.

இப்படிப்பட்டதொரு பரிந்துரைத் திட்டம் கொள்கை முன்வடிவு சில முக்கிய இலக்குகளை (உள்ளூர், தேசிய கொள்கை உருவாக்குபவர்கள் - அரசு முகமைகள், வெளிநாட்டு/சர்வதேச நிறுவனங்கள், கழகங்கள்) திட்டங்களை பலதரப்பட்ட காரணிகளை உள்ளடக்கிய கொள்கைப் பரிந்துரையை (கல்வி, கூட்டமைப்பு, ஆதரவு திரட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு) உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச அளவில் எடுத்துரைக்க வேண்டும்.

இந்தக் கொள்கை பரிந்துரை திட்டங்கள் ஒவ்வொரு குழுக்களாலும் சமர்ப்பிக்கப்பட்டு அவை விவாதத்திற்காகவும், மதிப்பீட்டிற்காகவும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

## குறிப்புரைகள் மற்றும் தொடர்ந்து வாசிக்க :

Windfuhr, Michael and Jennie Jonsen. 2005. Food Sovereignty: Towards democracy in localized food systems. Warwickshire: ITDG Publishing and FIAN International.

Draft Framework for National Programme on Food Sovereignty. Printed in People's Caravan 2004 for Food Sovereignty Proceedings, Pesticide Action Network Asia and the Pacific, February 2005.

Tujan, Antonio Jr. "Conceptual Issues on Food Sovereignty." Training on Food Sovereignty, Kolkata, India 19-21 September 2005.

La Via Campesina. "The right to produce and the access to land. Food Sovereignty: A Future without Hunger." Rome, Italy, November 1996.

Tujan, Antonio Jr. "Components of Food Sovereignty Platform and Program Implementation." Training on Food Sovereignty, Kolkata, India, 19-21 September 2005.

Windfuhr. Michael and Jennie Jonsen. 2005. Food Sovereignty: Towards democracy in localized food systems. Warwickshire: ITDG Publishing and FIAN-International.

The People's Convention on Food Sovereignty. Available at http://www.aprnet.org/index.php?a=show&t=conferences&c=Asiapacific%20Peoples%20Convention%20on% 20Food%20Sovereignty&i=18. Also printed in People's Caravan 2004 for Food Sovereignty Proceedings, Pesticide Action Network Asia Pacific, February 2005.

Sape, Gilbert. "Advocacy Campaigning for People's Food Sovereignty." Training on Food Sovereignty, Kolkata, India, 19-21 September 2005.

# வடிவம் 4

# உணவு இறையாண்மைக்கான ஆதரவு குறித்த விளக்கம்

## நோக்கங்கள் :

*உணவு இறையாண்மை குறித்த ஆதரவு திரட்டலில் குறைந்த அனுபவம் பெற்ற நண்பர்களின் புரிதலுக்காக இந்த விளக்கம் தரப்பட்டுள்ளது. இப்பணியில் ஈடுபடும்போது தேவைப்படும் சில அடிப்படை கருத்துகள் குறித்த தெளிவாக்கத் தினை இந்த விளக்கம் முன்வைக்கிறது.*

**காலம்:** *1 மணி நேரம்*

## ஆதரவு திரட்டுதல் என்றால் என்ன?

*ஒரு குறிப்பிட்ட நிகழ்விற்காக மற்றவர்களின் ஒத்துழைப்பை, ஆதரவை திரட்டும் முயற்சியே ஆதரவாக வாதாடுதல் அல்லது ஆங்கிலத்தில் அட்வகசி (*Advocacy*) என்றழைக்கப்படுகிறது. மக்களை ஒரு குறிப்பிட்ட செயலில் ஈடுபடுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சி எனலாம். பரிந்துரைத்தல், ஒத்துழைத்தல், சவால்களை எதிர்கொள்ளுதல் அல்லது ஒரு குறிப்பிட்ட சிந்தனையை தற்காக்கும் முயற்சி என்றும் கூறலாம்.*

## கொள்கை சார்பான ஆதரவு திரட்டல்

*ஒரு கொள்கைக்கு சார்பான ஆதரவினை திரட்டும் முயற்சியில் ஒரு குறிப்பிட்ட லட்சியத்தை எட்டுவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட பல திட்டங்களையும், செயல்பாடுகளையும் கையாளுதல். ஒரு பொதுவான மக்கள் விவாதத்தை ஏற்படுத்தும் வகையில் மக்களின் பல்வேறு தரப்பட்ட எதிர்பார்ப்புகளை, தேவைகளை ஒருங்கிணைத்தல்.*

*கொள்கை சார்பு ஆதரவு திரட்டும் முயற்சிகளில் பாதிக்கப்பட்டோர் பெரிதும் ஈடுபடுத்தப்படுகின்றனர். அதேநேரத்தில் அதிகார வர்க்கத்தையும் எதிர்கொண்டும் மாற்றுக்கருத்துகளை முன் வைக்கும் சூழ்நிலையும் உள்ளது. சட்டமன்றம், அரசு அதிகார அமைப்புகள், முறைப்படுத்தும் முகமைகள் மற்றும் நீதிமன்ற அமைப்புகள் ஆகியவற்றின் மீதும் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.*

## கொள்கை ஆதரவு திரட்டல் முயற்சிக்கும் - மக்கள் இயக்கங்கள் நடத்தும் முகாம்களுக்கும் உள்ள வேறுபாடுகள்

*கொள்கை ஆதரவு திரட்டும் முயற்சி என்பது தற்போது நடைமுறையிலுள்ள கொள்கைகளுக்கு விடப்படும் சவால்களை இலக்காக எதிர் கொண்டுள்ளது. அதேநேரத்தில் புதியதாக கொண்டு வரப்பட இருக்கும் ஒரு கொள்கையை எதிர்ப்பதுடன் அதற்கான மாற்று திட்டத்தையும் முன் வைக்கிறது. மக்கள் இயக்கங்களின் முகாம்கள் என்பது பரந்துப்பட்ட தன்மையுடன் சட்டம் மற்றும் கொள்கைகளுக்கு மேலாக மக்கள் பிரச்சனைகளை முன்வைக்கிறது. கொள்கை ஆதரவு திரட்டல் என்ற ஒரு முயற்சி மக்கள் இயக்கங்கள் நடத்தும் முகாம்களில் ஒரு அங்கமாக வேண்டுமானாலும் இருக்கலாம்.*

## ஆதரவு திரட்டும் முயற்சிகள் ஏன்?

- ஒரு கொள்கையை உருவாக்கவும், குறிப்பிட்ட நோக்கம் மற்றும் இலக்கை எட்டுவதற்கு தேவையான, இசைவான சுற்றுச்சூழல் கட்டமைப்பை உருவாக்குவது.
- கூடுதலாக வளங்களையும், ஆதரவையும் திரட்டுவது
- வளர்ச்சி செயல்பாடுகளில் மக்கள் பங்கேற்பை உறுதி செய்வதுடன் அதற்கான வழிமுறைகளுக்கு தேவைப்படும் திட்டங்களை முன்வைப்பது.
- மக்களை அதிகாரப்படுத்துவதுடன் தனி நபர்கள் தங்களின் கருத்துகளை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துவது.
- மக்கள் சார்பு திட்டங்களை உறுதி செய்வது.

## ஆதரவு திரட்டும் முயற்சிகளின் நோக்கங்கள்

### உடனடி நோக்கங்கள்

- தற்போதுள்ள சட்டங்கள்/முறைமைகளில் மாற்றங்களை கொணர்தல்.
- அரசியல் தளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துதல்.
- குறிப்பிட்ட பிரச்சனைகள் குறித்து பொதுவாக விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
- அமைப்புக்குள்ளேயே தேவைப்படும் சக்தியையும், அனுபவத்தையும் உருவாக்குதல்.

### நீண்ட கால நோக்கங்கள்

- சமூக நிறுவனங்களுக்கிடையே ஒட்டுமொத்த மாற்றத்தைக் கொண்டு வர முயற்சி செய்தல்.
- சமூக மாற்றத்திற்காக தேவைப்படும் அரசியல் சூழ்நிலைகளையும் தேவைப்படும் கருத்துக்களை அடைதல்.
- மக்களுக்கான சமூக மாற்றத்திற்காக ஆக்கப்பூர்வ விழிப்புணர்வினை மேம்படுத்துதல்
- சனநாயகத்தின் கூறுகளை கட்டியெழுப்புதல்.

## ஆதரவு திரட்டும் முயற்சிக்கான ஐந்து அளகீடுகள்

**1. ஒருவர் தாம் யாருக்காக பணிப்புரிய போகிறோம் என்ற இலக்கினை வரையறுத்தல்**

- அரசு அதிகாரிகள்
- திட்ட அலுவலர்கள்
- மற்ற அமைப்புகளும், நிறுவனங்களும்
- சாதரண பொது மக்கள்
- வெகுசன தொடர்பு சாதனங்கள்

**2. ஒரு குறிப்பிட்ட இலக்கிற்கு உள்ளான மக்களை எப்படிப்பட்ட ஊடகத்தின் மூலம் அணுகுவது.**

பொது மக்கள் மத்தியில் பலதரப்பட்ட பிரச்சனைகள் உள்ளன. ஒவ்வொருவருக்கென்றும் ஒரு குறிப்பிட்ட நோக்கம், மதிப்பீடுகள், வாழ்க்கை சம்மந்தப்பட்ட நிகழ்வுகள் மற்றவர்களிடம் இருந்து மாறுபட்டு இருக்கின்றன. எனவே ஒவ்வொருவருக்கென்று ஒரு குறிப்பிட்ட அணுகுமுறை தேவைப்படுகிறது.

### 3. ஒரு குறிப்பிட்ட குழுவிற்கான தெளிவான தகவல்கள் வடிவமைக்கப்பட வேண்டும் அவர்கள் புரிந்துக் கொள்ளும் வகையில் கொண்டுச் செல்லுதல்

ஒரு குறிப்பிட்ட கருத்தாக்கத்தை தமக்கு முன் வைத்துள்ள மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் அவர்களை தூண்டிவிடும் வகையில் ஆழமான கருத்துக்களை முதலில் கண்டறிந்து அதனை தெளிவாக மக்களிடம் கொண்டுச் செல்லவேண்டும்.

இதற்கென்று எப்படிப்பட்ட ஊடகம் பயன்படுத்தலாம் என்பதனையும் முடிவு செய்ய வேண்டும். அதற்கேற்ப ஒருவர் தமது ஆதரவு திரட்டும் முகாம்களை வடிவமைக்கலாம்.

### 4. தனி நபரின் உணர்வுகளுக்கு ஏற்ப தகவல்களை அமைய வேண்டும்

ஒவ்வொரு தனி நபரின் குறிப்பிட்ட முன்னுரிமைகள், பிரச்சனைகள் ஆகியவற்றை அணுகும்போது அவர்கள் கொண்டுள்ள மதிப்பீடுகளை மனதில் கொண்டு தகவல்களை கொண்டுச் செல்ல வேண்டும்.

### 5. மக்களின் திட்டங்களை மாற்றுதல் அல்லது மறு வடிவமைத்தல்

ஒருவர் தன்னுடைய கருத்துகளுக்கு மற்றவர்களின் ஒத்துழைப்பு பெறுதல் என்பது ஒரு நீண்ட நெடிய செயல்பாடாகும். பொறுமை, புதுமை, ஒருங்கிணைந்த செயல்பாடுகள் இதற்காக தேவைப்படுகிறது. ஏனெனில் ஒரு தனி நபரின் எண்ணத்தை மாற்ற வேண்டும் என்பதே இந்த செயல்பாடுகளின் நோக்கமாகும்.

## ஆதரவு திரட்டும் முயற்சிகளின் திட்டங்கள்

### 1. கல்வி

- ஆய்வு மற்றும் வெளியீடுகள்
- சமூக அடிப்படையிலான நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளுதல்
- மக்களை ஒருங்கிணைத்தல் மற்றும் கல்வியூட்டுதற்கான அமர்வு

### 2. வெகுசன தொடர்பு சாதனங்களை பயன்படுத்துதல்

### 3. ஆதரவு திரட்டல்

- அரசு அதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ளுதல்.
- விவாதங்கள்
- பொது மக்கள் குறைத் தீர்ப்பு கூட்டங்களில் பங்கேற்றல்.

### 4. கூட்டமைப்புகளை ஏற்படுத்துதல்

- நிறுவனங்களை மற்றும் தனி நபர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல்.
- ஆய்வு கட்டுரைகள் மற்றும் வெளியீடுகளை பகிர்ந்துக் கொள்ளுதல்
- பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இருக்கும் வளங்களை ஒருங்கிணைத்தல

### 5. மக்கள் செயல்பாடுகள்

- பேச்சுவார்த்தைகள்
- போராட்டங்கள்